## புதிய காலத்தை அழைத்து வந்த களம்

**பலவேகய, சத்ஜெய, ஜெயசிக்குறு, ரிவிபல, றணகோச, வோட்டஷெட் எல்லாவற்றையும் முறியடித்த வரலாற்று நிகழ்ச்சி**

→ 6


# களத்தில்

(07.09.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (216)




ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ- ஆயுதபலமோ அல்ல; அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப்பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

# யாழ்நகர் அருகே கடும் சமர்

## பெரும் இழப்புக்களுடன் இராணுவம் முடக்கம்!
## சந்திரிகாவின் தேர்தல் முதலீட்டுக்குப் பெருத்த நட்டம்!!



காவல் அரணாய் புலிகள் நிமிர்ந்தனர்
வந்த எதிரிகள் புறமுதுகிட்டனர்.

**மூன்று நாள் சண்டையில், இருநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவம் பலி. ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவம் படுகாயம்.**

**மூன்றாம், நான்காம், ஐந்தாம் திகதிகளில் சிறீலங்காப்படை மேற்கொண்ட முன்னேற்ற முயற்சிகள் யாவும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டன. மிடுக்கோடு புறப்பட்ட சிறீலங் காப்படை, எதிர்பார்த்திராத பெரும்இழப்புக்களுடன், புறப்பட்ட இடத்திற்கே அவமானகரமாய் விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றது.**

ஆனையிறவுப் பெருந்தளத் தாக்குதல்களுடன் உயிர் காக்க ஓடி, ஒதுங்கியிருந்த சிறீலங்கா இராணுவம், நா... மூன்றாம் திகதி அதிகாலை திடீரெனத் தமது நிலைகளை ... வெளியேறி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் ...திகளை நோக்கி முன்னேற ஆரம்பித்தன. பெருந்தொகைப் ...த்தைக் கொட்டி வாங்கிக் குவித்த ஆயுதங்கள், போர்க் ...லங்களின் சக்திமிக்க பயன்பாட்டால், இராணுவத்தின் மனோ நிலை உச்சம் பெற்றுள்ளதாகச் சிங்களஅரசு இறும்பூத மார்தட்டி நிற்க, இந்தப் படைநடத்துகை மேற்கொள்ளப் ...ட்டிருக்கின்றது. முதலாம் இரண்டாம் திகதிகளில், கண் ...டித்தனமாக மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுவீச்சுக்கள், ...டுமையாக நடத்தப்பட்ட பல்குழல் ஏவுகணைத் தாக்குதல் ...ள், மழையெனப் பொழிந்த ஆட்டிலறிச் செல்த்தாக்குதல் ...ளால், குடாநாட்டின் கரையோரப்பகுதிகள், தென்மராட்சிப் ...குதிகள் அதிர்ந்து குலுங்கி, எரிந்து புகை கக்கிக்கொண்டி ...க்க, தமது தாக்குதல்களால் விடுதலைப் புலிகள் அழிந்திருப் ...ார்கள், அல்லது களைத்திருப்பார்கள் என்ற நினைப்பில், ...ிங்கப்படையினர் பெரும் எடுப்புடன் புறப்பட்டனர்.

நாற்பத்தெட்டு மணிநேரங்களுக்கு மேலாகச் சிறீலங்காப் படை நடத்திய வான்தாக்குதல்கள், ஆட்டிலறித் தாக்குதல்களை எதிர்கொண்டு, குண்டுமழையில் நனைந்தபடி, எதிரியின் வரவுக்காக விடுதலைப் புலிகள் காத்திருந்தனர்.

ஐந்து முனைகளில், சிறீலங்காப்படை முன்னேறியது. ஐந்து முனைகளில் சண்டைக்களத்தை திறந்தது சிங்கள இராணுவம். கொழும்புத்துறை, அரியாலை, மட்டுவில், சரசாலை, மீசாலைப் பகுதிகளில், சிங்களப்படையின் பெருமெடுப்பிலான வரவை, தடுத்துநிறுத்திப் போரிட்டனர் விடுதலைப் புலிகள்.

ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த மோதல் திங்கள் வரை தொடர்ந்தது. பலமணிநேரக் கடும் சமரின் பின்னர், விடுதலைப் புலிகளின் உக்கிரமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிங்களப்படையினர் கொல்லப்பட்ட தமது சகாக்களின் சடலங் களையும் கைவிட்டுவிட்டு, தமது நிலைகளை நோக்கி பின் வாங்கி ஓடினர். ஓடிய படையினரையும் விரட்டிச் சென்று விடுத லைப் புலிகள் மடக்கித் தாக்கும் அளவிற்கு சிங்களப்படை யினர் பரிதாபகரமாய் ஓடவேண்டிய சமர்க்களமானது யாழ் பாணத்தின் புறநகர்ப்பகுதி. தாக்குதலை நடத்திவிட்டு திரும் பிய அணியினர்மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி நாற்பத்திமூன்று படையினரைக் கொன்றனர் என, ஓட ஓட இராணுவம் தாக்கப்பட்ட அவமானகரமான செய்தியை, சற்று நாகரீகமாகத் தெரிவிக்க முற்பட்டது சிறீலங்காப் பாதுகாப் பமைச்சகம்.

இந்த இரண்டு நாள் சண்டையில், நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயங்களுக்கும், காயங்களுக் கும் உள்ளாகினர்.

தமது இராணுவ நடவடிக்கையின் இலக்கு எட்டப்பட்டு விட்டதால் தமது நடவடிக்கை முற்றுப் பெற்றுவிட்டதாக சிறீ லங்கா இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரத்தினா அன்றே செய்தியாளர்களுக்கு செய்திவழங்கினார்.

அவர் அவ்விதம் தெரிவித்திருந்தாலும்கூட,

தேர்தலைக் குறிவைத்து நடத்தப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கை, பெரும் தோல்வியில் முடிவடைந்ததைப் பொறுத்துக் கொள்ளாத சிறீலங்காப் பாதுகாப்பு உயர்பீடம் மீண்டும் பெரும் எடுப்பிலான நடவடிக்கையை, உடனேயே முடுக்கிவிடப் பணித்தது.

மீண்டும் அதேமுனைகளில், அதே முனைப்புடன், விமானப்படையின் குண்டுவீச்சு, ஆட்டிலறிகளின் செல்வீச்சுக் களின் துணையுடன், மறுநாள் ஐந்தாம் திகதி, சிங்களப்படை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி முன்னேற முற்பட்டது. மீண்டும் கடும்மோதல், இறுதியில் அதேவிடை. அன்றைய மாலைக்குள், சிங்களப்படை பழைய நிலைகளுக்கே விரட்டியடிக்கப்பட்டது. சிங்களப்படையின் இழப்பு இருநூற்றி ஐம்பதைத் தாண்டியது. சண்டைக்களம் எங்கும் சிங்களப்படையின் சடலங்கள் சிதைந்து கிடந்தன.

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, பாராளுமன்றத் தேர்தல் களத்தில் வெறுங்கையோடு இறங்கியிருக்கின்றார். சாதனை கள் என்று சொல்லிக்கொள்ள ஒன்றுமே இல்லை அவரிடம்.

யுத்தமுனையில் விடுதலைப் புலிகளிடம் அவரது படை வாங்கிக் கட்டியது ஒரு பெரும் சோகவரலாறு என்றிருக்க, சமா தான மேடையில் அவர் ஆடிய சமாதான நாடகமும் அல்லோல கல்லோலப்பட்டிருக்கின்றது. ஆகவே தேர்தலை வெற்றிகொள்ள அவருக்கு ஏதாவது தேவைப்படுகின்றது. இராணுவ வெற்றி யென்பது சுலபமானதாக அமையக்கூடும் என அவரைத் தூண் டியது, அண்மையில் வாங்கிச் சேர்த்த மிக்-27 யுத்தவிமானங் களும், பல்குழல் ஏவுகணை செலுத்திகளும், அவற்றின் மீதான நம்பிக்கையின் பேரில் தளபதிகள் அள்ளிவழங்கிய வாக்குறுதி களுமாக இருக்கலாம்.

என்றாலும் சரியான பதிலை புலிகள் கொடுத்திருக்கின் றார்கள். சந்திரிகா அரசின் இந்த ஆக்கிரமிப்பு ஆசையின் முது கெலும்பை முறித்துப் போட்டு, தாயக மண்ணின் ஒவ்வொரு அங்குலத்தையும் எதிரிகளிடம் இருந்து காக்கக் கடுமையாகப் போராடி, நூற்றிப்பத்து புலிவீரர்கள் மூன்று நாள் சமர்க் களத்தில் விதையாகியிருக்கின்றனர். அந்த மாவீரர்களை தமிழீழம் தலைசாய்த்து வணங்குகின்றது. ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# உலகைக் கவர சமாதானக் கோசம். வாக்குகள் கவர போர்க்கோலம்.

சிறீலங்காவில் தேர்தல் என்றால், தமிழ் மக்களின் வாழ்விடங்கள் மீதான குண்டு வீச்சுக்களுக்கும், இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கும், தமிழ் மக்கள் மீதான கொடுமைகளுக்கும் குறைவில்லை என்றாகி விட்டது.

இனவெறித்தாக்குதல்கள், இனஅழிப்பு நடவடிக்கைகளே, தமது வெற்றிக்காக சிங்கள ஆளும் வர்க்கம் கடைப்பிடிக்கும் அதிமுக்கியமான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளாகிவிட்டது. இரத்தம் தோய்ந்த இந்தத் தேர்தல்கால இன அழிப்புக் கலாச்சாரம் முகிழ்ந்து பலம் பெற்று வருகின்றது சிறீலங்காவில்.

சிறீலங்காவின் தேர்தலில் வெல்ல தமிழ் மக்களின் இரத்தம் தேவைப்படுகின்றது. அவர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுவது தேவைப்படுகின்றது. அவர்களின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவது தேவைப்படுகின்றது. சொல்லொணா வேதனைகள் சுமந்து அவர்கள் மேற்கொள்ளும் இடப்பெயர்வுகள் தேவைப்படுகின்றது.

மேடைகளில் இனவெறி பொங்க, கத்தித் தீர்ப்பதுடன் சிங்களம் இன்று நிறுத்திக் கொள்வதில்லை. அதன் சிந்தனை செயல் வடிவம் பெற்று, அழிவுகளையும் அவலங்களையும் தமிழ் மக்கள் மத்தியில் திணிக்கின்றது.

அன்று, இனக்கலவரங்கள் என்ற பெயரில், ஆளும் சிங்களப் பேரினவாதத்தின் கொடுங்கரங்கள் அருவமாய் உள்ளிருந்து இயங்கி, இயக்கி தமிழின அழிப்பை நிகழ்த்தியது. இன்றோ வெளியரங்கமாகவே, அங்கீகாரம் பெறப்பட்ட ஒரு அரச செயற்பாட்டு வடிவமாகியுள்ளது.

சிறீலங்காவின் பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ள நிலையில் தமிழ் மக்கள் மீதான, தமிழரின் வாழ்விடங்கள் மீதான தாக்குதல் ஒன்று எதிர்பார்க்கப்பட்டதே.

சந்திரிகா ஆட்சிபீடம் ஏறியதன் பின்னர், நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலை ஒட்டியும் இராணுவ வெற்றிகளுக்கான படை நடத்துகைகள் அவர் நடத்தியிருந்தார் என்பது மீள நினைக்கத்தக்கது. அது ரிவிபலவாகவும், றணகோசவாகவும் தமிழர் நிலங்களை விழுங்கின. தமிழ் மக்களுக்குப் பெரும் அழிவுகளை வழங்கின.

இன்று, ஒரு பெரும் நெருக்கடி நிலையில் இருந்தபடி, சிறீலங்காவின் பதினோராவது பாராளுமன்றத்திற்கான தேர்தலை சந்திரிகா அரசு எதிர்கொள்ளுகின்றது. சிறீலங்காப்படையினர் பல ஆண்டுகள் பெரும் இழப்புக்களுடன், அங்குலம் அங்குலமாக முன்னேறி ஆக்கிரமித்திருந்த வன்னிப்பெருநிலப்பரப்பை, விடுதலைப் புலிகள் சில நாட்களிலேயே மீட்டிருப்பதாலும், யாழ் குடாநாடு மீதான இராணுவப்பிடியின் அதிமுக்கியமான நம்பிக்கையின் இருப்பிடமான, ஆனையிறவுப் பெருந்தளத்தை, சிங்களம் வரலாற்றில் முதன்முதலாக விடுதலைப் புலிகளிடம் இழந்திருப்பதாலும் கொதித்துப் போயுள்ள சிங்களப்பேரினவாதத்தை சந்திரிகாவால் எப்படிச் சாந்தப்படுத்த முடியும்?

மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் சிங்கள அரசுகளால், யுத்த வெறியூட்டப்பட்டு, தமிழ்மக்கள் அழிக்கப்பட வேண்டும், யுத்தம் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனைக் கிறுக்கில் உழலும் சிங்களப் பேரினவாதிகள், சந்திரிகாவின் அண்மைக்கால சமாதான நாடகத்தால் குழம்பிப் போயுள்ளனர். அவர்களின் பேரவா தீர யுத்த அழிவுகள் தீனியாக வழங்கப்பட வேண்டியுள்ளது.

இந்த நெருக்கடி நிலையை, வெற்றிகொள்ள சந்திரிகா அரசால் மேற்கொள்ளப்பட்டதே அண்மைய இராணுவ நடவடிக்கை. விடுதலைப் புலிகளின் பலத்தை நன்கு அறிந்திருந்த போதும், சிறீலங்கா அரசு இந்த விசப்பரீட்சையில் இறங்கியது. ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியோடு, சிறீலங்கா அரசு அவசரஅவசரமாக வாங்கிச் சேர்த்த மிக்–27 யுத்த விமானங்களையும், பல்குழல் ஏவுகணைச் செலுத்திகளையும் சந்திரிகா பெரிதும் நம்பியிருந்தார்.

கடந்த மாதம் சிறீலங்காவின் பதினாறாவது இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற லெப்டினன் ஜெனரல் பலகல்ல, புதிய ஆயுதங்கள், போர்விமானங்களின் பயன்பாடு குறித்து பெரு நம்பிக்கை தெரிவித்திருந்தார். படையினரின் மனோநிலை உயர்ந்திருப்பதாகவும், போரிடும் ஆற்றல் உயர்ந்திருப்பதாகவும் அவர் பெருமை பேசினார். புதிய பதவியை ஏற்றுக் கொண்ட தெம்பில், இழந்த பிரதேசங்களை மீட்பதுடன், விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்த ஆனையிறவையும் மீட்போம் எனச் சபதம் செய்தார்.

யாழ்ப்பாணத்தின் புதிய கட்டளையதிகாரியாக கடந்த மாதம் பதவியேற்றிருந்த மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரவும், இந்தப் புதிய ஆயுதங்கள் படைக்கலங்கள் மீதே நம்பிக்கை வைத்துப் பேசினார். விடுதலைப் புலிகளின் முன்னேற்றத்தை தம்மால் தடுத்து நிறுத்த முடியும் என்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல், இழந்த பகுதியை மீட்கும் மனோதிடத்தையும் படையினர் பெற்றிருக்கின்றார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

சிங்கள அரசினதும், சிங்களப் படைத்துறைத் தளபதிகளினதும் குருட்டுத்தனமான இந்த நம்பிக்கை, எட்டாக்கனிக்கான நப்பாசையின் விளைவே, தற்போதைய இராணுவ நடவடிக்கையும் அதன் விளைவால் ஏற்பட்ட பேரிழப்புமாகும்.

கடந்த மூன்றாம், நான்காம், ஐந்தாம், திகதிகளில், யாழ் நகரின் கிழக்குப் புறத்தேயும், தென்மராட்சியிலுமாக, ஐந்து முனைகளில், சிங்களப்படையினர் மேற்கொண்ட தரைநகர்வு முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டிருக்கின்றது. பெரும் இழப்புக்களுடன் சிங்களப்படை புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் சென்று முடங்கவேண்டியதாகி விட்டது. கொல்லப்பட்டவர்கள் காயப்படுத்தப்பட்டவர்கள் என ஆயிரத்து ஐந்நூறிற்கு மேற்பட்ட படையினரை சண்டைக்களத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய பரிதாபம்.

புதிய போர்க்கலங்கள் தந்த நம்பிக்கையில் புறப்பட்ட சிங்களப்படையினரை, தமது சுய நம்பிக்கையின் அடிப்படையில் வழிமறித்துத் தாக்கி நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை வீழ்த்தி, வந்த படையை விரட்டியடித்திருக்கின்றனர் விடுதலைப் புலிகள்.

இந்தப் பாடத்துடன், திருந்திக் கொள்ளுமா சிங்களம் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் ஒன்று மாத்திரம் உண்மை. அறிவிலித்தனமாக விரைய முற்படும் சிங்களத்திற்கு வகுப்பெடுக்க விடுதலைப் புலிகள் தயாராகவே காத்திருக்கின்றனர். ■

## வரலாற்றில் மறக்கமுடியாத துயரநினைவுகள். வந்தாறுமூலைப் படுகொலையை மறப்பரோ தமிழீழத் தமிழர் !

தென்தமிழீழத்தின் கல்விப் பட்டறையாக இலங்கி எண்ணற்ற பட்டதாரிகளை தமிழீழத்திற்கு தந்த பல்கலைக்கழகம் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகம். இப்பல்கலைக்கழகத்தில் இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகிய வேளையில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 40,000 தமிழர்கள் ஏதிலிகளாகத் தங்கியிருந்தனர். தென் தமிழீழத்தின் பலபகுதிகளிலும் சிங்களப் படைகளும், முஸ்லீம் ஊர்காவல் படையினரும், இரத்த வெறிபிடித்த புளட் மோகன் குழுவினரும் தமிழர்களை வேட்டையாட அலைந்து திரிந்தனர். பல இடங்களிலும் இவர்களால் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் வேட்டையாடப்பட்டனர். கல்விக் கோயிலான வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தினுள் தங்கினால் வேட்டை மிருகங்களிடம் இருந்து தப்பலாம் என்ற நம்பிக்கையில் உறவுகளைப்பிரிந்து உடமைகளை இழந்து உயிரை மாத்திரம் ்கையில் பிடித்துக் கொண்டு தஞ்சமடைந்திருந்தனர் அம்மக்கள்.

இவர்களை வேட்டையாடவென 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் திகதி கப்டன் மொனாஸ் தலைமையில் வந்த சிறீலங்காப் படைகள் பல்கலைக் கழகத்தைச் சுற்றி வளைத்தன. தலையாட்டிகளோடு வந்த இராணுவத்தினர் 158 தமிழர்களை தம்மோடு கொண்டு வந்த இரு அரச பேருந்துகளில் அடைத்து வாழைச் சேனை நோக்கிக் கொண்டுசென்றனர். இதன்போது தமது உறவுகளைக் கொண்டுசெல்ல வேண்டாம் எனக் கதறிய உறவுகளிடம் அவர்களை உடனே திரும்பிக் கொண்டு வருவோம் என படைத்தரப்பால் வாக்குறுதி அளிக்கப்பட்டது. "158 தமிழ் மக்களின் கைகளை சிங்கள இராணுவம் முரட்டுத்தனமாகக் கட்டிய வேளையில் பல்கலைக்கழகக் கட்டிடத்தினுள் எழுந்த மரணஓலம் இன்னும் அடங்கவில்லை" என்று கூறுகின்றார். இச்சம்பவத்தை நேரில் பார்த்த பல்கலைக்கழக விரிவுரையாளரொருவர். கொண்டுசெல்லப்பட்ட தமிழர்களில் 11 வயது சிறுவனொருவனும் அடங்கியிருந்தான் இவனைக்கூட விட்டு வைக்காத சிங்களப்படை 158 தமிழர்களையும் வாழைச்சேனைக்கு அருகேயுள்ள நாவலடி இராணுவ முகாமில் வைத்து படுகொலை செய்து புதைத்தது.

மட்டக்களப்பு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கப்டன் மொனாஸ், கப்டன் பாலித, வாழைச்சேனை இராணுவமுகாம் பொறுப்பாளர் மேஜர் மஜீத், செங்கலடி இராணுவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்காவின் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்து எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றேன்

**திரு. பெஞ்சமின் கில்மன்**

அமெரிக்க காங்கிரசின் சர்வதேச உறவுகளுக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவரான திரு. பெஞ்சமின் கில்மன் சிறீலங்கா அரசு தமிழர்கள் மீது தொடுத்துள்ள போரினால் ஏற்படும் அவலங்கள் குறித்து தீர்க்கமான நடவடிக்கை அமெரிக்க அரசு எடுக்க வேண்டும் எனக்கோரி அமெரிக்க இராஜாங்க அமைச்சர் திருமதி. மடலின் அல்பிறைற் அவர்களுக்கு கடிதங்கள் இரண்டை கடந்த ஆகஸ்ட் மாதம் 11,30 ஆம் திகதிகளில் வரைந்துள்ளார். அவர் வரைந்த கடிதங்களில் கூறப்பட்ட விடயம் சுருக்கமாக இங்கு தரப்படுகின்றது.

சிறீலங்கா அரசு தமிழர்கள் மீது தொடுத்துள்ள யுத்தத்தினால் மனித உரிமை மீறல்கள் மிக அதிகமாக இலங்கைத்தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெறுவதையிட்டு பெரிதும் கவலையடைகின்றேன். சிறீலங்கா அரசினால் தொடர்ந்து தனது இராணுவ வலுவை நிதியூட்டல்கள் மூலம் அதிகரித்துச் செல்கின்றபோதும் அதனால் விடுதலைப் புலிகளை போரில் வெல்லமுடியாது. விடுதலைப் புலிகளால் பல வெற்றிகரமான தாக்குதல்கள் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு சிறீலங்கா இராணுவம் பின் தள்ளப்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் திருமதி. சந்திரிகாவினால் இந்த யுத்தம் வெல்லப்பட முடியாது என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றத்திலும் சந்திரிகாவிற்கு தீர்வுத்திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடையாது. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்களின் நிலையோ மிகவும் பரிதாபகரமாக உள்ளது. சிறீலங்கா ஆளும் தரப்பினால் தொடர்ச்சியாக அமுல்ப்படுத்தப்பட்டு வரும் பத்திரிகைத் தணிக்கையினால் உண்மைநிலையினை உலகு அறிய முடியாதுள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்களுக்குக்கூடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதிலும் குழந்தைகளுக்கான பால்மா, மருந்துவகைகள், தடுப்பூசிகள்கூட சிறீலங்கா அரச படைகளால் இப்பகுதிகளுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் வரை மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்படப் போவதில்லை.

சிறீலங்கா அரசு விதித்துள்ள பத்திரிகைத் தடையை நீக்கவும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு உதவிகள் செல்வதற்கு சிறீலங்கா அரசு அனுமதிப்பதற்கும் அமெரிக்க அரசு அழுத்தங் கொடுக்கவேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நாம் நிச்சயமாக உதவவேண்டும். என அவர் வரைந்த முதல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் இறுதியாக கடந்த மாதம் 30ஆம் திகதி வரைந்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது. சிறீலங்கா ஆளுந்தரப்பானது இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் இருந்து வழுவிவிட்டது. இம்மாதத் தொடக்கத்தில் எனது குழுவைச் சேர்ந்த திரு. அடோல்வ் பிராங்கோ சிறீலங்காவிற்குச் சென்று நிலைமைகளைக் கூறியதில் இருந்து என்னால் பின்வரும் விடயங்கள் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. சிறீலங்கா அரசின் திட்டமிட்ட காலதாமதங்களால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வடக்குகிழக்கிற்கு அனுப்பப்படும் உணவுப் பொருட்களும் கொண்டு செல்வதில் பாரிய இடர்பாடுகள் உள்ளது என்பது அறியக் கூடியதாக உள்ளது. சிறீலங்காவின் ஆளும்தரப்பிற்கும் எதிர்த்தரப்பிற்கும் இனப் பிரச்சனையைத் தீர்ப்பதில் அக்கறை யில்லை என்பதும் வெட்டவெளிச் சமாகத் தெரிகின்றது. ■

# சந்திரிகா அரசாங்கத்தில் காணாமல் போவோர் தொகை என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளது.

**சர்வதேச மன்னிப்புச் சபை**

01.09.2000 அன்று சிறீலங்காவின் ஜனாதிபதியான சந்திரிகா அம்மையாருக்கு சர்வதேச மன்னிப்புச் சபை அனுப்பியுள்ள கடிதத்தின் சாரம் வருமாறு.

கடந்த ஒகஸ்ட் 10ஆம் திகதிக்கும் 16ஆம் திகதிக்கும் இடையில் வவுனியாவில் 7 தமிழர்கள் சிறீலங்காப் பாதுகாப்புப் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இரகசிய வதைமுகாங்களில் வைத்து தொடர்ச்சியான வதைகளுக்கு உள்ளாக்கப்படலாம் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 16ஆம் திகதி இடம்பெற்ற தற்கொடைத் தாக்குதலுக்குப் பின்னர் என்றுமில்லாத வகையில் தமிழ் இளைஞர்கள் காணாமல் போவது அதிகரித்துள்ளது. கடந்த மேமாதம் அமுல்ப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தை அடுத்து காணாமல் போகும் அபாயம் அதிகரித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் 500 தமிழர்கள் காணாமல் போயுள்ளனர்.

இங்கே சுட்டிக்காட்டப்படுகின்ற விடயம் யாதெனில் சிறீலங்கா அதிகாரத் தரப்பினரால் சிறைகளில் தடுத்து வைக்கப்படும் தமிழ் இளைஞர்கள் மீதான அத்துமீறிய தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். சர்வதேச விதிகளுக்கு அமைய கைதிகள் பராமரிக்கப்பட வேண்டும்.

பாதுகாப்புப் படையினர் நிச்சயமாக மனித உரிமைகளை மீறாமல் மதிக்க வேண்டும். சிறீலங்கா ஜனாபதி இனி மேல் இதுபோன்ற சம்பவங்கள் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காணாமல் போனோர் தொடர்பாக சிறீலங்கா அரசு உண்மையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ■

# போர் நெறிமுறைகளை தவறவிட்ட அரசு

**ஐ.நா ஆணைக்குழுவில் சர்வதேச கல்வி அபிவிருத்தி அமைப்பு.**

நடந்து முடிந்த ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் உப ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் கலந்து கொண்ட அரசசார்பற்ற நிறுவனமான சர்வதேச கல்வி அபிவிருத்தி அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலிருந்து.

சிறீலங்கா அரசு படைகள் யாழ் குடா நாட்டில் தமிழ் மக்கள் மீது இழைத்து வரும் மனித உரிமை மீறல்கள் பொஸ்சினியாவிலும் ருவாண்டாவிலும் நடந்தவற்றிற்கு சற்றேனும் குறைந்தவையல்ல. சிறீலங்கா அரச படைகள் மனித உரிமைகளை தமது காலின் கீழ் போட்டு மிதிக்கின்றன. சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் காலத்திலேயே தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளன. தொடர்ந்தும் கொழும்பு ஆட்சி பீடம் வடகிழக்கிற்கு உணவுத் தடையை அமுல்ப்படுத்தி வருகின்றது. இதனை அமெரிக்க காங்கிரசைச் சேர்ந்த திரு. கில்மன் அவர்கள் திருமதி. மடலின் அல்பிறைற்றிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதையும் இங்கு நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

1945ஆண்டின் ஜெனிவா ஒப்பந்தத்தின் 147வது சரத்தின் பிரகாரம் போர் நடைபெறும் இடங்களில் அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் இவற்றில் எதனையும் சந்திரிகா தலைமையிலான அரசு கருத்திலெடுப்பதில்லை. விசேடமாக யாழ் குடாநாட்டில் யுத்த வலயத்தினுள் அகப்பட்டுள்ள பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலைமை வரவர மோசமடைந்து வருகின்றது. இவர்களின் நிலைதொடர்பில் தொடர்ச்சியான முட்டுக்கட்டைகளை சிறீலங்காப் படைத்தரப்பு போட்டுவருகின்றது. இதுமாத்திரமன்றி சிறீலங்கா அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் பத்திரிகைச் செய்தித் தணிக்கையினால் வெளிஉலகிற்கு என்ன நடைபெறுகின்றது என்பது அறிய முடியாதுள்ளது. இதனால் சிறீலங்காப் படைகளால் தமிழ்மக்கள்மீது மேற்கொள்ளப்படும் மனித உரிமைமீறல்களும் வெளியுலகை எட்டுவதில்லை. ■

முகாமைச்சேர்ந்த களுஆராய்ச்சி, மட்டக்களப்பு பிரதான முகாமைச் சேர்ந்த மேஜர் மோகான் சில்வா ஆகிய இவரும், இப்படுகொலைகளின் சூத்திரதாரிகள் மட்டுமல்ல, இந்தக் கொடுமையில் நேரடியாகவே பங்குபற்றியுள்ளனர் என்பதை முன்னாள் நீதிபதி பாலகிட்ணர் தலைமையிலான ஆணைக்குழுவினால் இனங்காட்டப்பட்டபோதும், இந்தக் கொடுமையாளர்கள், மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளால் எதுவித தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை. மாறாக தமிழ் மக்களுக்கெதிராக மோசமான கொடுமைகளைப் புரிந்த அவர்களின் சேவைகளைப் பாராட்டி, சிங்கள அரசுகள் பதவி உயர்வுகளையே வழங்கிவந்துள்ளன.

பல்வேறு சர்வதேச அழுத்தங்களினால் அன்றைய பிரேமதாசா அரசு இப்படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவென ஜே.எல்.ஏ. சொய்சா தலைமையிலான மனித உரிமைகள் பணிக்குழுவினை நியமித்தது. இக்குழு மேற்கொண்ட விசாரணையின் முடிவுகள் நீண்ட இழுத்தடிப்பிற்குப்பின்னர் 1994இல் மூன்று பக்க அறிக்கைவடிவில் வெளியிடப்பட்டன. இதில் 158 பொதுமக்களுக்கான நஸ்டஈடுகள் வழங்கப்படவேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் ஆகிய இரு சிபாரிசுகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இவற்றில் இதுவரை எதுவும் மாறிமாறிவந்த சிங்கள அரசுகளால் அமுல்ப்படுத்தப்படவில்லை.

ஆனால் தமது உறவுகள் சிங்கள இனவெறிப்படையினரால் உயிரோடும் கொன்றும் மண்ணில் புதைக்கப்பட்டதை தென்தமிழீழ மக்கள் மறக்கவில்லை. சிங்களப்படையின் கொடுங்கரங்களில் 158 தமிழ் மக்கள் சிக்கி மடிந்த கொடுமையின் பத்தாண்டு நினைவை, 05.09.2000 அன்று மட்டக்களப்பு மாவட்டம், நெஞ்சுகனக்க நினைவு கூர்ந்தது. மட்டக்களப்பு மாவட்ட மக்கள் விழிப்புக்குழுவின் வேண்டுகோளின் பேரில் மாவட்டம் எங்கணும் பூரண கதவடைப்பு நடைபெற்றது. நகரப் பகுதிகளான மட்டுநகர், செங்கலடி, வந்தாறுமூலை, வாழைச்சேனை பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் அமர்வுகளைப் பகிஸ்கரித்தனர். வீதிகளில் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டன. ஆலயங்களில் பாதகர்கள் கொன்றொழித்தவர்களின் நினைவாக விசேட பூசைகள் நிகழ்த்தப்பட்டன. இந் நினைவுகூரல் நிகழ்வுகளையும் சிங்களப் படைகள் குழப்ப முற்பட்டன. இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களின் முன்னால் ஆக்கிரமிப்பாளனின் அடக்குமுறை முறைமைகள் ஒன்றும் செய்யமுடியாது என்பதற்கமைய சிங்களப் படைகளால் மக்களின் உணர்வு வெளிப்பாட்டை தடுத்து நிறுத்தமுடியவில்லை. இந் நினைவுகூரல்கள் வெறுமனே நினைவு நிகழ்ச்சிகள் அல்ல மாறாக தாயக விடுதலைக்காக திரண்டு நிற்கும் ஒரு தேசிய இனத்தின் உணர்வுக் குமுறல்கள் என்பதை சிங்களப் படைகளால் ஒருபோதும் உணர முடியாது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆட்சி மாறினாலும் — மாறாத — இனவெறி அரசியல்



ஓயாத அலைகள் -3 படை நடவடிக்கையின் இராணுவ விளைவுகள் சர்வதேச நாடுகளின் சிந்தனைப் போக்கில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளன. புலிகள் இயக்கத்தின் இராணுவ ஆற்றலை- அதற்கிருக்கும் மக்கள் ஆதரவை சந்தேகத்திற்கு இடமின்றி தெரிந்துகொண்டுவிட்டன.

போர் மூலம் சமாதானம் என்ற சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாட்டை சர்வதேசம் இனியும் ஏற்கத்தயாரில்லை.

போரை நிறுத்தி அமைதிவழியில் அரசியல் தீர்வு கான முயற்சிக்குமாறு அவை சிங்கள அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கின்றன.

எனினும் சர்வதேச நாடுகள் கண்டுணர்ந்த களயதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு கொள்கைமாற்றத்தில் ஈடுபட சந்திரிகா அரசாங்கம் தயாரில்லை.

போரைத் தீவிரப்படுத்தவும். நவீன ஆயுத தளபாடங்களை மேலும் மேலும் கொள்வனவு செய்வதிலும். சிங்கள தேசத்தைப் போருக்காகத் தயார்ப்படுத்துவதிலுமே அது ஈடுபடுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற விடயத்தை சர்வதேச சமூகத்தை ஏமாற்ற நடாத்தும் ஒரு தந்திரோபாய அரசியற் செயற்பாடாகவே சந்திரிகா அரசாங்கம் கருதுகின்றது.

இது சர்வதேச நாடுகளைக் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளை ஏமாற்றத்திற்குள்ளாக்கியுள்ளது இவை ஒரு புறம் இருக்க, சந்திரிகா அம்மையாரின் போர் நிலைப்பாட்டிற்கு மாறாக புலிகளுடன் பேசி அரசியல் தீர்வொன்றைக் காண முயல வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் நிலைப்பாடெடுத்துக் கருத்துகூறிவருகின்றார்.

இது காரணமாக பல சர்வதேச நாடுகள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இராஜதந்திர ரீதியில் தொடர்பு கொண்டு- கருத்துப் பரிமாற்றம் செய்வதில் ஆர்வம் காட்டுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிராக, மட்டுப்படுத்தப்பட்டளவில், இராஜதந்திர அழுத்தங்களை கொடுப்பதாகவும் பொருண்மிய உதவிகளைத் தாமதப்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது.இத்தகைய புறநிலையில், சந்திரிகா அம்மையாரிடமிருந்து சிங்கள அரசின் தலைமைப்பதவி ரணில் விக்கிரமசிங்கவிடம் கைமாறுவதை சர்வதேசம் இப்போது விரும்புகின்றதா? என்ற கேள்வி கொழும்பில் எழுப்பப்படுகின்றது.

"அவ்விதம் விரும்புகின்றன"எனப் பேரினவாதத்தின் சித்தாந்தவாதியாகவும், பிரகடனப்படுத்தப்படாத பேச்சாளராகவும்- ஜலண்ட் பத்திரிகை வாயிலாக செயற்பட்டுவரும் பிரபல பத்தி எழுத்தாளர் நளின் -டி- சில்வா கருத்துக் கூறி கட்டுரை வரைந்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் புதிய அரசாங்கம் அமைந்தால் அது உடனடியாகப் போரைநிறுத்தி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி ஒரு அரசியல் இணக்கப்பாட்டிற்கு வரும் என்று மேலைத்தேய இராஜதந்திரிகள் நம்புவதாகவும், அதனால் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பொ. ஐ. முன்னணி தோல்வியடைய வேண்டுமென்று அவை விரும்புவதாகவும், அரசாங்கத்தின்மீது சிங்கள மக்களின் அதிருப்தியை வளர்த்துவிடுவதற்காக அரசாங்கத்திற்கான உதவித்திட்டங்களை தாமதப்படுத்துவதாகவும்; அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் சந்திரிகா அரசாங்கத்திற்கெதிராக மறைமுகப் பிரச்சாரங்களில் ஈடுபடுவதாகவும் சிங்களப் பேரினவாதிகள் மேற்கு நாடுகளைக் குற்றம்சாட்டுகின்றனர்.

சமாதானத் தேவதையென்றும் அப்பழுக்கற்ற ஜனநாயகவாதியென்றும் துணிச்சல்மிக்கப் பல்லினத்தலைவர் என்றும் முன்பு, மேற்குநாடுகளால் புகழாரம் சூட்டப்பட்ட அம்மையாரை, இன்று சமாதான விரோதி போல அது பார்க்க முனைவது ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும்.

புலிகள் அழிக்கப்படும்வரை போர்தொடரும் என்ற அம்மையாரின் நிலைப்பாட்டை பேரினவாதிகள் ஆதரித்தனர். அம்மையாருக்கு தமது அரசியல் ஆதரவை வழங்கி தமது தலைவியாகவும் அவரை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை மேற்கு நாடுகளுக்கெதிராகவும் அவற்றின் கிளைநிறுவனங்களான அரசசார்பற்ற நிறுவனங்களுக்கெதிராகவும் சிங்களப்பேரினவாதிகளின் கோபம் தீவிரப்பட்டுள்ளதை கொழும்பில் வெளிப்படையாகக் காணக்கூடியதாகவுள்ளது.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது நளின் - டி- சில்வா தெரிவித்திருப்பதைப் போல ஆட்சிமாற்றமொன்றை மேற்குலகம் எதிர்பார்த்திருப்பதை உணரக்கூடியதாய் உள்ளது.

ஆனால், அது விரும்பும் இந்த ஆட்சிமாற்றம் இலங்கையின் இனப்பூசலை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என அது நம்பவிரும்புவதில்தான் சர்ச்சையே உள்ளது.

17 வருடகாலம் ஆட்சிசெய்த ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் இனவெறிக் கொள்கையால் இலங்கைத்தீவு இரத்தக்களரியாக மாற்றப்பட்டபோது,



அமைதிக்கோசத்தை உரத்து முழங்கிய சந்திரிகா அம்மையார் ஆட்சிப்பொறுப்பேற்றால் இரத்தக்களரி நிறுத்தப்படும் என நம்பிய சர்வதேச நாடுகள் அம்மையாரை ஆதரித்தன.

ஆனால் பதவியேற்றபின் ஐ.தே. கட்சியின் போர்க்கொள்கையை அம்மையார் தீவிரப்படுத்தியதையே உலகம் கண்டது.

**தமிழீழத்திலிருந்து எல்லாளன்**

இப்போது ஐ.தே.கட்சியே சமாதானத்தை பிறப்பிக்கப்போவதாக பேசும்போது சர்வதேசம் அக்கட்சி மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கியுள்ளது.

தீவிர சிங்களப் பேரினவாதிகளாகவும் தமிழினத்திற்கு எதிரான ஆட்சியாளர்களாகவும் வரலாறு அடையாளம் காட்டிய சிங்களத்தின் தலைவர்கள் ஆட்சியில் இல்லாதபோது, தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு பற்றியே பேசியிருந்தனர் என்பதும், ஆட்சிப் பொறுப்பு இவர்களின் கைகளுக்கு வந்த போது எவ்வாறு தமிழ்மக்களுக்கு எதிரான வெறித்தனமான கொள்கைகளை நடைமுறைப்படுத்தி தீவையே இரத்தக்களரியாக மாற்றியிருந்தனர் என்பதும் வரலாறாகும்.

அதுபோலவே, தனிச்சிங்களச் சட்டத்தை பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது "இருமொழி ஒரு நாடு : ஒரு மொழி இருநாடு" என்ற பிரசித்தி வாய்ந்த அரசியல் தீர்க்கதரிசனத்தை உதிர்த்த இடதுசாரியான கொல்வின் ஆர்-டி-சில்வாஅவர்களே அரசியல் அமைப்புச் சட்ட வாயிலாக தமிழ் இனத்திற்கிருந்த பாதுகாப்புச் சரத்துக்களை நீக்கி (1972ல்) ஆட்சியில் சிங்கள -பௌத்த ஆதிக்கத்தை உறுதிப்படுத்த காரணகர்த்தாவாக இருந்தார் என்பதும் வரலாறாகும். ஆட்சிப்பொறுப்பில் இல்லாது எதிர்க்கட்சியாக இருக்கும்போது உலகின் அரசியல் நீரோட்டத்திற்கு ஏற்ப சிங்களத் தலைவர்கள் அறிக்கைகள் விடுவதும். பின்னர் ஆட்சிக்கட்டில் ஏறியதும் பேரினவாதத்தின் காவலர்களாக தீவிரமாகச் செயற்படுவதும் இலங்கைத்தீவின்அரசியல் வரலாறாகும்.

இப்போது ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐ.தே.கட்சியின் முறை வந்துள்ளது.

புலிகளுடன் பேசி-போரை நிறுத்தி சமாதானத்தைக் காண முனைவேன் என்று கூறும் ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க எத்தகைய அரசியல் திட்டத்தை வைத்துள்ளார்?

வடக்கு கிழக்கிற்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுப்பேன் என்று பொத்தாம் பொதுவாகக் கூறும் அவர் தமிழரின் அரசியல் அபிலாசைகள் பற்றி சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு.

தாயகம்-தேசியம் - தன்னாட்சி என்று தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் அரசியல் தீர்வுகான முயல்வேன் என ரணில் விக்கிரமசிங்க ஒரு போதும் கூறவில்லை. அத்துடன் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்களைக் கைவிட்டு பின்வாங்கி ஓடாது புலிகளுக்கு எதிராக வீரமாகப் போர்புரியும்படி அவர் சிங்களப்படையினரை உற்சாகப்படுத்துகின்றார். பண்டைய சிங்கள மன்னர்களின் வரலாற்றை நினைவூட்டி சிங்களத் தேசிய வெறியைப் படையினருக்கு ஊட்டுவதிலும் ஈடுபடுகின்றார்.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐ.தே. கட்சியின் கைகளில் ஆட்சிப் பொறுப்பு சென்றடைவதற்கும் போர் ஓய்ந்து நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படுவதற்கும் எதுவித தொடர்பும் இல்லை.

தமிழ் இனத்திற்கு எதிரான அரசியல்- நிர்வாக மையமாகவே சிறீலங்கா அரசும் அதன் அரசியல் யாப்பும் உள்ளது. எண்ணிக்கையில் பெரும்பான் மையான சிங்கள - பௌத்தர்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் சர்வாதிகார நிறுவனமாகவே சிறிலங்கா பாராளுமன்றம் செயற்படுகின்றது. அரசின் கல்விக்கொள்கையும் பொருண்மியத் திட்டமிடலும் நிர்வாகக் கட்டுமானங்களும் பேரினவாதச் சித்தாந்தத்திற்குச் சேவைசெய்யும் வகையிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கருத்துக்களைப் பரப்பும் சிங்களத்தொடர்பூடகங்களின் அரசியல் அடித்தளமாகப் பேரினவாத சித்தாந்தமே உள்ளது. இந்த உண்மைகளைக் கண்டறியும் ஒருவர் சிங்கள - தமிழ் இனப்பிரச்சனையின் சிக்கலான வடிவத்தைக் கண்டறியமுடியும்.

தமிழரின் அரசியல் அபிலாசைகளை ஏற்றலென்பது, சிங்கள பௌத்த பேரினவாதச் சித்தாந்தத்திற்கு முற்றிலும் விரோதமானது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண விரும்பும் ஒரு ஆட்சியாளர் சிறீலங்கா அரசின் கட்டமைப்பிலும்- அதன் அரசியல் யாப்பிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இது நடைமுறைச்சாத்தியமானது என்பதற்கு எந்தவொரு அறிகுறியும் இல்லை.

இந்தப் பேருண்மைகளை அசட்டை செய்துவிட்டு, ஆட்சியாளர்கள் மாறினால் அரசியல் பிரளயங்கள் நடைபெறலாம் என்ற சர்வதேசத்தின் நம்பிக்கை இலவுகாத்த கிளியின் கதையாகவே முடியும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தியாகதீபம்

## லெப்.கேணல் திலீபன்

மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் தலைவர்களும், போராளிகளும் தமது இலட்சியங்களை வென்றெடுப்பதற்காக சாத்வீகப் போராட்டங்களையும், ஆயுதப் போராட்டங்களையும் நடாத்தி வருகின்றார்கள். ஒரு மெழுகுவர்த்தி போல தன்னை உருக்கி தனது துன்பங்களை மற்றவர்களுக்கு உணரச்செய்து, மற்றவர்கள் மனதில் கருத்து மாற்றத்தை ஏற்படுத்தித் தனது நியாயபூர்வமான கோரிக்கைகளை மற்றவர்களும் ஏற்கச் செய்து தனது நோக்கத்தினை வென்றெடுப்பதே ஒரு உண்ணாநோன்புப் போராட்டத்தின் நோக்கமாகும். இப்போராட்டத்தின் உச்சவகைப் போராட்டமாகச் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை உலகின் பல பாகங்களிலும் வாழும் மக்கள் தலைவர்கள் பின்பற்றியிருக்கின்றார்கள்.

ஆந்திரமாநிலத்தைத் தனி மாநில-மாக்கும்படி போட்டி ஸ்ரீ ராமுலு சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டும்படி கோரி சங்கரலிங்க நாடார் சாகும்வரை போராட்டம் நடத்தினார். இவர்கள் இருவரும் தமது இலட்சியத்தை அடையுமுன்பே சாவைத் தழுவிக்கொண்டார்கள். ஆனால் தெலுங்கு தேச மக்கள் மத்தியில் போட்டி ஸ்ரீ ராமுலு ஊட்டிய தேசிய வாத உணர்ச்சி அணைந்து விடவில்லை, மாறாக அது நீறுபூத்த நெருப்பாகவே இருந்தது. தெலுங்கானாப் போராட்டம் பின்னர் போட்டி ஸ்ரீ ராமுலுவின் தியாக மரணத்தை அடியொற்றி அவரது தியாகத்தின் கட்டுமானத்தில் வளர்க்கப் பட்ட தெலுங்குதேசம் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டது. இதேபோலச் சென்னை மாநிலத்தை தமிழ்நாடு என அறிஞர்

*"இந்த யாழ்ப்பாணக்கோட்டை இருக்கும் இடத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழனின் கொடி பறந்தது. அந்தக் கொடியை போர்த்துக்கேயர் பறித்தெடுத்தனர். போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரும், ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயரும் கைப்பற்றிக்கொண்டனர். ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவர் கடைசியில் கைப்பற்றினர். இந்தக் கோட்டையில் மீண்டும் தமிழ்க்கொடி புலிக்கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அந்தத் தமிழ்க் கொடியைப் பறக்கவிடுவதற்காக. ஒவ்வொருவரும் எமது உயிரை அர்ப்பணித்துக் கொண்டு வருகிறோம். இதில் என் பங்கு எப்போது என்பதுதான் எமது கேள்வியாக இருக்க வேண்டுமே தவிர, பதவிகள் எமக்குப் பெரிதல்ல, பதவிகளைத் தேடிச் செல்பவர்கள் புலிகள் அல்ல. அதற்கு வேறு ஆட்கள் இங்கு இருக்கின்றார்கள்." திலீபன்*




அண்ணா தலைமையிலான அரசு பெயர் சூட்டுவதற்கு கால்கோளாக அமைந்ததும் சங்கரலிங்க நாடாரின் உயிர்த்தியாகமேயாகும்.

இதே மாதிரியாக ஐரிஸ் விடுதலைப் போராட்டத்தில் பிரித்தானியரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட விடுதலை வீரன் பொபி சாண்டஸ் சிறையில் தம்மை அரசியல் கைதியாக மனிதாபிமானத்துடன் நடத்தக்கோரி சிறைக்குள்ளேயே சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். அவர் சிறைக்குள்ளேயே மரணத்தைத் தழுவிக் கொண்டாலும் ஆயுதப் போராளியான பொபி சாண்டஸ் ஊட்டிய தேசிய உணர்வு இன்று ஐரிஸ் விடுதலைப் போராளிகளின் துப்பாக்கிகளினூடாகக் கனன்று கொண்டேயிருக்கின்றது.

### திலீபன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள்

1. பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்படவேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படவேண்டும்.
4. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.
5. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ள இராணுவப் பொலிஸ்நிலையங்கள் மூடப்படவேண்டும்.

ஆனால் இவர்கள் எவருமே படைத்திராத ஒரு தனித்துவமான வரலாற்று ஈகச்சாவை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த லெப்.கேணல் திலீபன் படைத்தான். உலகத்திலேயே இரண்டாவதாக ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து, முதலாவது நபராக ஈகச்சாவு அடைந்து உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளிலெல்லாம் புதிய சாதனை ஒன்றைப் படைத்தான். அப்படியானால் முதன் முதல் சொட்டு நீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தவர் யார் என்ற கேள்வி உங்கள் மத்தியில் எழுகின்றதல்லவா? அந்தச் சாதனைகூட எமது விடுதலை வரலாற்றிலேயே நடந்தேறியது. ஆம் தமிழீழ மக்களின் ஒளிவிளக்கான தமிழீழத் தேசியத் தலைவரவர்களால் 23.11.1986 அன்று தமிழகத்தில் அப்போராட்டம் நிகழ்த்தப் பட்டது. தமிழகத்திலே தேசியத் தலைவ-ரவர்கள் தங்கியிருந்த வேளையில் தகவல் தொடர்புச் சாதனங்கள் அப்போதைய இந்திய அரசால் கையகப்படுத்தியதைக் கண்டித்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து உலகில் விடுதலைப் போரில் அகிம்சையையும் ஆயுதத்தையும் ஒருங்கே உபயோகித்த பெருமை தமிழீழத் தேசியத் தலைவரவர்களையே சாரும். அவரின் வழியில் இரண்டாம் நாளே இந்திய அரசு பணிந்ததால் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

ஆயுதப் போராளியான திலீபன் சிறீலங்கா அரசுடன் களங்களிலே ஆயுதங்களுடன் மோதிய திலீபன், பாரதம் தமிழீழமக்களின் விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகத் தலையிட்ட வேளையில் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை எடுத்துரைத்தும், தமிழீழ மக்களினைப் பாதுகாப்பதற்காகவும் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்தினான். "போராட்டவடிவங்கள் மாறலாம், போராட்ட இலட்சியம் மாறாது" என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் சுதுமலைப் பிரகடனத்திற்கு செயல்வடிவம் கொடுத்தான்.

விடுதலைப் புலிகள் வித்தியாசமானவர்கள் என்று அடிக்கடி திலீபன் சொல்வான். அதற்கேற்ப திலீபனும் உண்ணாவிரதத்தை இதுவரைக்கும் உலகத்திலே எவரும் செய்யாத முறையில் செய்து காட்டினான். அதாவது உண்ணாவிரதம் ஆரம்பித்த 15.09.1987 மதியம் 12.00 மணியிலிருந்து ஈகச்சாவு அடைந்த 26.09.1987 மு.ப 10.48 வரைக்குமான 265 மணித்தியாலங்களில் கடைசி விநாடி வரைக்கும் துளிநீர்கூட அருந்தாது உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் புதிய பரிமாணம் கொடுத்தவன் திலீபன். இன்று அவனது தியாகத்தின் எதிரொலியினால் தென்கிழக்காசியா தொடக்கம் மேற்கு ஐரோப்பிய நாடுகள் வரைக்கும் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை பலரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் ஈகச்சாவானது உலக வரலாற்றில் யாருக்குமே கிடைக்காத முகவரியை ஈழத் தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. ஆந்திராவில் போட்டி ஸ்ரீ ராமுலுவின் தியாகச் சாவினால் ஏற்பட்ட எழுச்சியை எப்படி பிரதமர் நேருவினால் கட்டுப்படுத்த முடியவில்லையோ, அதேபோல் தியாகி திலீபனது ஈகச்சாவினால் உருவான ஈழத்தமிழர்களின் எழுச்சியை நேருவின் பேரன் ராஜீவ் காந்தியாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த மக்கள் எழுச்சியின் முன்னே அமைதிப்படை என்ற பெயரில் ஆக்கிரமிப்பு நோக்கத்தில் வெள்ளைக் கொடியோடு வந்தவர்களால் நிலைகொள்ள முடியவில்லை. அப்பாவித் தமிழர்களின் இரத்தக்கறை படிந்த தமது கரங்களில் துப்பாக்கிகளைத் தலைகீழாகப் பிடித்தபடி தமிழீழ மண்ணின் கடற்கரையைத் தாண்டி இந்தியக் கரைகளில் கப்பல் கப்பல்களாகச் சென்று இறங்கினார்கள். இறுதியில் திலீபனே வென்றான். ■



### பார்த்தீபன் கனவு

பார்த்தீபன் கனவு நிச்சயம் பலிக்கும்
பாரினில் தமிழீழத் தாயகம் பிறக்கும்
ஆர்த்தெழும் கடலாய் மக்களின் உணர்வும்
ஓர்திசை குறித்தெழ பேரிகை முழக்கும்!
போர்த்துறை மருவி வெற்றியை அணைக்கும்
பாவியர் அராஜக ஆட்சியும் மரிக்கும்!
சீர்த்திடம் உரச சத்தியம் செழிக்கும்
சாசுமே இலவெனும் ஓர் யுகம் உதிக்கும்!

திலீபன் என்றோர் தத்துவம் நிலைக்கும்
தியாக வாழ்வின் பொற்சிலை நிறுவும்
இழிவே கண்டான் தமிழன் பிளவால்
அதனை ஆழ்த்தி இச்சமர் இணைக்கும்!
புலியே அன்றோ, பற்றிடல் விடிவும்
புலரும் வேளை வந்திடும் வரையில்
நலிவே அற்றோர் கொத்தெனத் தமிழர்
நிலையாய் வாழும் நற்றவம் மலரும்!

மலரும் உரிமை விடிவின் ஒளியை
மனத்துக் கண்ணால் மன்னவன் கண்டான்!
உலரும் உதடு உயிரை உமிழ
உளத்துத்தென்பால் உண்ணலும் விட்டான்!
பலரும் விழிநீர் உதிர்க்கும் நிலையை
படித்தே மண்ணில் தன்னுயிர் நட்டான்!
புலரும் புரட்சி தொலைவில் இல்லையே
பிடித்துச் செல்வோம் பார்த்தீபன் பாட்டை..!

-மாவை வரோதயன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிய காலத்தை அழைத்து வந்த களம்



## பலவேகய, சத்ஜெய, ஜெயசிக்குறு, ரிவிபல, றணகோச, வோட்டஷெட் எல்லாவற்றையும் முறியடித்த வரலாற்று நிகழ்ச்சி




அரசியல் செல்வாக்குப் பெருக்கிற்காகத் தேர்தல்களுக்காக சிறீலங்காவின் ஐக்கிய முன்னணி செய்ததில் முக்கியமானது தமிழரின் வாழ்வழிப்புக்கள், ஐக்கிய முன்னணியின் சமாதானத்துக்கான நடவடிக்கைகள், அவை ஒவ்வொரு தேர்தலுக்காகவும் வன்னியில் ஒன்றின் மீது ஒன்றான தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. ஒரு கட்ட ஜனாதிபதிப் பதவி முடியும் தறுவாயில் அடுத்த தேர்லுக்கான அறிவிப்பைச் சந்திரிகா வெளியிட்டபோது இந்த நடவடிக்கைகள் யாவும் தகர்ந்து போயின. தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் நேரடி நெறிப்படுத்தலின் கீழான ஓயாத அலைகள் - 03 நவம்பர் 1 முதல் 20 வரையான நாட்களில் 32 மாதகால சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக் கட்டமைப்புக்களை முற்றாகச் சிதைத்தது. 1984ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமும் மீட்கப்பட்டமை இத்துடன் இணைக்கப்படவேண்டியது. ஓயாத அலைகள் -03 மீட்டது வெறும் நிலத்தை மட்டுமல்ல, இராணுவத்தின் பெரும் கட்டமைப்புக்களையும் இது சீர்குலைத்தது. அரசின் இராணுவக் கனவுகளை கலைத்தது என்று ஓயாத அலைகள் 03இன் பரிமாணம் நீள்கின்றது. 32 மாதகால நடவடிக்கைகள் மூலம் சிறீலங்கா இராணுவம் வன்னியின் கணிசமான பகுதிகளை ஆக்கிரமித்தது. தமிழர்களை நிலங்களை விட்டு விரட்டியடித்தது. அவற்றில் தன்னைத் தக்கவைத்துக் கொண்டது ஒரு கட்டம். மக்களோடு நிலங்களைப் பிடித்தது மற்றொருகட்டம்.

பகுதி 1:

1997 மே 13இல் யாழ். குடாநாட்டு இராணுவத்திற்கான தரைப்பாதையைப் பிடித்தல் என்ற பெயரில் ஆரம்பாமன ஜெயசிக்குறு நடவடிக்கை கண்டி வீதிவழியே நொச்சிமோட்டையிலிருந்து புறப்பட்ட ஒரு முனை பிரதான வீதியின் இருமருங்கு கிரமங்களையும் ஆக்கிரமித்தவாறு ஆமை வேகத்தில் பெரும் இராணுவ உயிர்ப் பலியுடன் நகர்ந்தது.

1984இல் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுச் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட தமிழரின் தாயகபூமி மணலாறு: கிழக்கே கடற்கரையோரம் கொக்குத்தொடுவாய் முதல் மேற்கே பழைய முறிப்புக்குளம் வரை இராணுவ முன்னரண்கள் பாதுகாத்து நிற்க, இந்தக் குடியேற்றங்கள் இயங்கி வந்தன. 1984ற்கு முன்பு பழைய முறிப்புக்குளத்தை மையமாகக் கொண்டு சிலோன் தியேட்டர் என்ற தமிழர் விவசாயப் பண்ணை செயற்பட்டது. இராணுவ ஆக்கிரமிப்பின் பின் சிலோன் தியேட்டர் பண்ணை மணலாற்றின் பிரதான இராணுவ முகாம்களில் முதன்மையானதாக மாறியது. மணலாறு சிங்களக் குடியேற்றத்தின் மேற்குமுனை சிலோன் தியேட்டர். இதற்குத் தெற்கே தனிக்கல்குளம் என்ற குளம் உள்ளது. முன்பு இரு தமிழ்க் குடும்பங்கள் அங்கு வசதியாக வாழ்ந்து வந்தன. நெடுங்கேணி விவசாயிகளுக்குத் தனிக்கல்குளத்தின் கீழ் வயல்கள் இருந்தன. ஆக்கிரமிப்பின் பின் தனிக்கல்குள வயல்களில் பயிர் செய்ய அங்கு ஒரு சிங்களக் குடியேற்றம் அமைக்கப்பட்டது. அது கஜபாபுர என்ற சிங்களப் பெயர் பெற்றது. சிலோன் தியேட்டர் இராணுவமுகாம் "கஜபாபுர இராணுவ முகாம்" என்ற பெயரால் குறிப்பிடப்பட்டது. தனிக்கல் பகுதி நிலங்கள் வன்னியில் அதிக வளம் பொருந்தியவை. (மணலாறு முழுவதும்) பெருமளவு ஆறுகளின் மூலம் இந்த மண் வளம்பெற்றது.

அதனால் தனிக்கல்லில் அமைந்த கஜபாபுர சிங்களக் கிராமமும் வளமாக இருந்தது. கஜபாபுர இராணுவ முகாமிலிருந்து அரைக் கிலோமீற்றர் தெற்கே சிங்களக் குடியேற்றம், இங்கு ஒரு சிறிய முகாம். அது குடியேற்றப் பாதுகாப்புக்கானது.

ஜெயசுக்குறு நகர்வை மேற்கொண்ட அடுத்த முனை கஜபாபுரவில் ஆரம்பமானது. அது மேற்கே ஒதியமலை, பெரியகுளம் கிராமங்களை உள்ளடக்கி இரவோடு இரவாக நெடுங்கேணியை ஆக்கிரமித்தது. வன்னியில் தொன்மையான வரலாற்றைக் கொண்ட நெடுங்கேணி மேட்டுநிலப் பயிர்களுக்குப் பெயர்போனது. வன்னியின் மரக்கறி ஆதாரம் நெடுங்கேணி, அந்த நெடுங்கேணி வாழ் மக்கள் எந்த ஒரு பொருட்களையும் கையில் எடுத்துச் செல்ல முடியாது இடம் பெயர்ந்தோரானார்கள்.

கண்டிவீதி வழி நகர்ந்த ஜெயசுக்குறு 18 மாத கால ஊர்வின் பின் தமிழர் நிலங்களின் வளங்களை அழித்தவாறு மக்களை விரட்டியடித்தவாறு மாங்குளத்துடன் தனது பயணத்தை நிறுத்த வேண்டியேற்பட்டது. வன்னின் ஆயிரம் சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பினை ஜெயசுக்குறு விழுங்கிக்கொண்டது.

பகுதி 2:

ரிவிபல, இது ஒருநாள் நடவடிக்கை. 1997 டிசம்பர் 2இல் நடந்தது. நெடுங்கேணியில் நிலைகொண்டிருந்த படைகளும் கரிப்பட்டமுறிப்பில் நிலைகொண்டிருந்த படைகளும் அந்த நாளன்று இரவோடு இரவாக ஒட்டுசுட்டான் நகரையும் கிராமங்களையும் ஆக்கிரமித்தன. மக்கள் வெளியேறிய நிலையில் கட்டடங்களுடன் ஒட்டுசுட்டான் இராணுவ மயமானது. வன்னியில் இரண்டாவது பாரிய குளமான முத்தையன்கட்டுக் குளத்து நிலங்கள் மக்களற்று வெறிச்சோடின. நெடுங்கேணிக் கடுத்த மரக்கறிப் பயிராதாரம் தரிசானது. ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆல





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யம் இராணுவ பிரசன்னத்துக்குட்பட்டது. ஒட்டுசுட்டான் அடங்கிய 134 சதுர கிலோ மீற்றர் நிலம் இராணுவச் சப்பாத்துக்களின் கீழ்போனது.

பகுதி 3:

றணகோஷ - 1: முன்னைய நடவடிக்கைகளில் வன்னியின் வளமிகு நிலங்களிலிருந்து மக்கள் விரட்டியடிக்கப்பட்டு இராணுவ மயமாக்கப்பட்டன. றணகோஷ வரிசை, மக்களுடன் நிலங்களை ஆக்கிரமித்தது. பொருளாதாரத் தடைகள், வாழ்வாதாரக் கட்டுப்பாடுகள் மூலம் வன்னிமக்களை நசுக்கித் துன்புறுத்திவந்த .சந்திரிகா அரசு, தனது கோட்பாட்டை இங்கு மாற்றியது. துன்பங்களில் இருந்து தம்மை மீட்பராக்கி, தமிழ் மக்களுக்கு மலிவு விலையில் பொருட்களை வழங்கியும் தாராளமான தடைகளற்ற பொருள் விநியோகத்தினாலும் தொலைபேசி, தொலைக்காட்சி வசதிகளாலும் தன்பக்கம் திருப்பும் தந்திரத்தின் மறுபெயர்தான் றணகோஷ. துன்பங்களை விதைத்துவிட்டு, அவற்றைக் களைவதன் மூலம் அதுவே போராட்டத்தின் இலக்கு என்பதான மாயையை ஏற்படுத்தி, மக்களை திசை திருப்புதல் ஆக்கிரமிப்பாளரின் வழமையான நடவடிக்கை. "சூரியக்கதிர்களில்" யாழ்ப்பாணத்தில் செய்த அதே பணியை வன்னியின் மேற்கில் "றணகோஷ" செய்தது.

றணகோஷ -1: 1999 மார்ச் 6இல் ஆரம்பமானது. வவுனியா நகரிலிருந்து மன்னார் நோக்கிய பிரதான பாதையில் உள்ள பூவரசங்குளத்தில் இருந்தும் வவுனியா நகரில் வடமேற்குக் கிராமமான பம்பைமடுப் பகுதியிலிருந்தும் படைகள் நகர்ந்து மக்களுடன் இரணைஇலுப்பைக்குளம் வரையான கிராமங்களைப் பிடித்தன. சிறுகுளங்களின் கீழ் விவசாயத்தை மேற்கொண்டு வந்த இந்தக் கிராமங்கள் வன்னியின் பாரம்பரிய குடியிருப்புக்களையும் வாழ்வு முறைமைகளையும் கொண்டவை. இந்தக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் 8500 பேர் இராணுவத்திடம் பிடிபட்டனர். இந்த நடவடிக்கை ஜெயசுக்குறுவால் ஆக்கிரமிக்கப்படாத புளியங்குளம் அருகான பாலமோட்டை, நவ்வி, வலையன்கட்டு, மூன்றுமுறிப்பு, பனங்காமம் கிராமங்களையும் ஆக்கிரமித்தது. 535 சதுர கிலோமீற்றர் பகுதி இராணுவ வசமானது.

றணகோஷ-2: மார்ச் 19இல் தொடங்கியது. மன்னார்- வவுனியா வீதியில் மடுச்சந்தியிலிருந்தும் மூன்று முறிப்பில் இருந்தும் நகர்ந்த சிறீலங்காப் படைகள் வன்னியில் கிறிஸ்தவர்களின் புனிதத் தலமாக வழிபடப்பட்டுவந்த மடுமாதா தேவாலயம் மற்றும் பாலம்பிட்டி கிராமங்களை ஆக்கிரமித்தன. மடுமாதா தேவாலயப் புனிதத்துவக் கட்டுப்பாடுகளை இராணுவம் மீறியது. அந்த ஆலயப் பகுதியில் இராணுவ நிலைகளை அமைத்தது. ஆலய வளாகத்துள் தஞ்சமடைந்திருந்த 20,000 மக்கள் இராணுவ வசம் பிடிபட்டனர். 325 சதுர கிலோமீற்றர் நிலம் இராணுவ பிரசன்னத்துக்குட்பட்டது.



றணகோஷ - 3: 1999 மே 8இல் மன்னார் - வவுனியா வீதியில் உயிலங்குளம் பகுதியில் இருந்த இராணுவம் நகர்ந்து கறுக்காய்க்குளம், ஆண்டான்குளம் வழியாக அடம்பன், ஆட்காட்டிவெளி, பரப்புக் கடந்தான் கிராமங்களை ஆக்கிரமித்தது. வளமிகு கட்டுக்கரைக்குளத்தின் கீழ் ஆண்டுமுழுவதும் நெல்விளையும் இந்தப் பூமி, 102 சதுர கிலோமீற்றர் அளவில் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டது.

றணகோஷ - 4: இருகட்டங்களாக 1999 யூன் 10இலும் 25இலும், பாலம்பிட்டியிலிருந்தும் பாப்பாமோட்டையிலிருந்தும் இராணுவத்துருப்புக்கள் முன்னேறி பள்ளமடு வரையான பகுதிகளை பிடித்தன. இங்கு 358 சதுர கிலோமீற்றர்கள் 67 சதுர கிலோமீற்றர்கள் நிலப்பரப்பு இராணுவத்தினால் இருபதாயிரம் மக்களுடன் ஆக்கிரமிக்கப்பட்டது.

தொடர்ச்சியான இந்த இலகுவான நடவடிக்கைகளை கணக்கிட்டு பூநகரி வீதியைப் பிடித்து யாழ் குடாவிற்கு தரை வழிப் பாதையை அமைக்க சிறீலங்கா அரசு திட்டம் தீட்டியது. இதற்காக செப்ரம்பரில் மண்டைதீவிலிருந்து பூநகரியைப் பிடிக்க ஒரு நடவடிக்கை சிறீலங்காவின் முப்படைகளாலும் திட்டமிடப்பட்டது. சிறீ

**- தி.தவபாலன் -**

லங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கட்டளையின் பேரில் பூநகரியைப் பிடிக்க கௌதாரிமுனையில் கடல்வழி, வான்வழிப்படைகள் இறக்கப்பட்டன. "சுழல்காற்று" என்ற பெயரிலான அந்தப் பாரிய நடவடிக்கை விடுதலைப் புலிகளால் முற்றாக முறியடிக்கப்பட்டது. சிறீலங்காப் படைகள் உயிரழிவைச் சந்தித்த அதேவேளை இரண்டு உலங்குவானூர்திகளும் விடுதலைப் புலிகளால் சேதமாக்கப்பட்டன.

றணகோஷ - 5: "சுழல்காற்று" சிதறடிக்கப்பட்ட அதேவேளை செப்ரம்பர் 12இல் சிறீலங்கா இராணுவ சிறப்புப்பயிற்சிக் கொமாண்டோக்களுடன் பள்ளமடு, சிராட்டிக்குளம், பெரியமடுப்பகுதிகளில் பாரியளவில் முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இதுவும் விடுதலைப் புலிகளின் பலமான எதிர்த்தாக்குதல்கள் மூலம் முறியடிக்கப்பட்டது. றணகோஷ நடவடிக்கைகள் 4ற்கு மேல் இராணுவத்திற்குப் பலனளிக்கவில்லை. இந்த நிலையில் இராணுவம் நடவடிக்கைகளை திசை மாற்றத் தொடங்கியது. பழையபடி ஜெயசுக்குறுவின் பிரதேசத்தில் முனையொன்று திறக்கப்பட்டது. கண்டிவீதியில் இராணுவம் மாங்குளத்துடன் நின்றுபோக இரணமடுவிற்குக் கிழக்காக நகர்வை மேற்கொள்ளத் திட்டமிட்டது. இதன் அடிப்படையில் பழைய கண்டிவீதியில் இறுதியாக அம்பகாமத்தில் இருந்த நிலையை உடைத்து இராணுவம் நகரத்தொடங்கியது.

வோட்டர்செட் 1: 99 ஒக்டோபர் 20இல் தொடங்கி 23இல் முடிந்த குறுகிய நடவடிக்கை இது. வன்னியில் மேலும் 12 சதுர கிலோமீற்றர்கள் இராணுவத்தால் விழுங்கப்பட்டது.

வோட்டர்செட் 2: வோட்டர்செட் 1இன் ருசியில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் எந்த இராணுவ லாபத்தையும் அது ஈட்டவில்லை.

இராணுவ நடவடிக்கைகளின் இலாப நட்டக் கணக்கு;

ஜெயசுக்குறுவில் 1000 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு பிடிக்கப்பட்டது. ரிவிபலவில் 134 சதுர கிலோமீற்றர் நிலம் வரவில் வந்தது. றணகோஷ 1,2,3,4,5,இல் 55 கிராமசேவைப் பிரிவுகளின் 250 கிராமங்கள் 48 ஆயிரத்து 500 மக்களுடன் 1387 சதுர கிலோமீற்றர் நிலம் வரவுக்கணக்கில் பதிவு செய்யப்பட்டது. வோட்டர்செட் 1இல் 12 சதுர கிலோமீற்றர் நிலம் வரவில்.

இந்தத் தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிக்க சிறீலங்கா இராணுவம் கொடுத்த உயிர்விலை 5000த்தினை எட்டு



கின்றது. அத்துடன் 10ஆயிரத்துக்கும் அதிகமானபடையினர் படுகாயமடைந்தனர். MI-17, MI-24 உலங்குவானூர்திகள் மற்றும் டாங்கிகள் உட்பட போர்க்கலங்களின் இழப்பு பல நூறுகோடிகளுக்கு மேலாகும். இவற்றின் விளைவாகப் பாதுகாப்புச் செலவு ஒதுக்கீடு ஆறாயிரம் கோடியை எட்டியது.

பாரிய நிலங்களைக் கைப்பற்றிய போதும் இராணுவம் மிக மோசமான உயிரழிவைச் சந்தித்ததும் அதன் மனவுறுதியில் தளர்வு ஏற்பட்டதும் மறுக்கப்பட முடியாது. குறிப்பாகச் சிறப்பு அமெரிக்கப் பயிற்சி பெற்ற கொமாண்டோக்கள் பெருமளவில் வன்னிக் களமுனையில் விடுதலைப் புலிகளால் சிதைக்கப்பட்டனர்.

வன்னிக்களமுனையில்;
நகர்வு இராணுவக்கட்டமைப்பு;

வன்னிப் போர்முனையில் நிலம்பிடிக்கும் நடவடிக்கைகளில் பிரதானமாக இரு இராணுவ டிவிசன்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. (ஒரு டிவிசன் 9000 படைகளைக் கொண்டிருக்க வேண்டும்) 55ஆம் டிவிசன், கொமாண்டோக்களைக் கொண்ட 53ஆம் டிவிசன் என்பனவே அவை. இவையே பாரிய உயிரழிவை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் சந்தித்தவை. குறிப்பாக 9000 படையினரைக் கொண்டிருக்க வேண்டிய இந்த டிவிசன்கள் இறுதி நேரத்தில் 4ஆயிரத்திற்கு உட்பட்ட படையினரையே கொண்டிருந்தன.

வன்னியில் ஆக்கிரமிப்பு இராணுவக் கட்டமைப்பு;

பாதுகாப்பு முன்னரண்; வன்னி ஆக்கிரமிப்பின் பின்னராக கிழக்கே கொக்குத்தொடுவாய் முதல் மேற்கே பாப்பாமோட்டை கடற்கரைவரை எந்தவொரு இடைவெளியும் இல்லாது இராணுவம் தொடர் முன்னரணை மிகப்பாதுகாப்பாக அமைத்திருந்தது.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**




## தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத் தேசியக்கொடியின் பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் வெளியிடப்பட்ட தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்ற சிறுகைநூலில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை, பகுதி பகுதியாக, இங்கு பிரசுரிக்கின்றோம்.

## "எங்கள் தேசியக் கொடியிது"

ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி
எட்டுத்திக்கிலும் மானத்தைச் சேர்த்தகொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி - புலி
காட்டிய பாதையில் சென்றகொடி (ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது - தமிழ்
மக்களைக்காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது - புலி
வீரத்தின் கொடியிது
மாவீரனின் கொடியிது (ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது - பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது - தமிழ்
ஈழத்தின் கொடியிது - புலி
ஏந்திய கொடியிது (ஏறுதுபார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்துவிழுத்திய
சாதனைக் கொடியிது - சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனையாவிலும்
உலவிய கொடியிது - சம
தர்மத்தின் கொடியிது - எங்கள்
தாயவள் கொடியிது (ஏறுதுபார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது - பிர
பாகரன் என்றிடும் காவியநாயகன்
போற்றிடும் கொடியிது - தமிழ்த்
தேசத்தின் கொடியிது - எங்கள்
தேசியக் கொடியிது.

(திரு. புதுவை இரத்தினதுரை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

26.08.2000 அன்று திருமலை மாவட்டம் அதியமாங்கனிப் பிரதேசத்தில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**கப்டன் மஜீந்தன்**
கந்தையா துரைசிங்கம்
திருமலை மாவட்டம்

இதேதினம் பாலமோட்டைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**2ஆம் லெப் ஈழக்கதிர்**
**ஆறுமுகம் மனோகரன்**
கிளிநொச்சி மாவட்டம்

26.08.2000 அன்று யாழ் வலிகாமம் பகுதியில் சிங்களப்படையுடன் ஏற்பட்ட மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தனர்

**மேஜர் திருவருள்**
அப்புத்துரை சிவானந்தமூர்த்தி
யாழ்ப்பாணம்

மூதூர் 64ஆம் கட்டையில் சிறீலங்கா இராணுவத்துடனான மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**வீரவேங்கை சிறிக்காந்**
காளிக்குட்டி குணரட்ணம்
திருமலை

27.08.2000 அன்று கிளாலிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**மேஜர் தமிழேஸ்**
மரியதாஸ் செல்வேந்திரன்
மன்னார் மாவட்டம்

27.08.2000 அன்று அம்பாறை அக்கரைப்பற்று ஆலையடிவேம்புப் பகுதியில் இடம்பெற்ற சிறீலங்காப் பொலிசாருடனான மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**2ஆம் லெப் பரமேசன்**
செல்வராசா பகீரதன்
மட்டக்களப்பு

28.08.2000 அன்று நாகர்கோவில் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின்போது போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

**வீரவேங்கை கபிலா**
பரமசாமி புஸ்பராணி
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை பொய்கை**
இராசலிங்கம் சரோஜினிதேவி
யாழ் மாவட்டம்.

29.08.2000 அன்று உயிலங்குளத்தில் ஏற்பட்ட சிறீலங்காப் படைகளுடனான மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**வீரவேங்கை தரணீதரன்**
தியாகராசா சிறீதரன்
நெடுங்கேணி, முல்லைத்தீவு.

மணலாறு மாவட்டத்தில் சிறீலங்காப் படைகளுடனான மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**2ஆம் லெப் யாழினியன்**
சின்னத்துரை புலேந்திரன்
மட்டக்களப்பு

நாவற்குழிப்பகுதியில் சிறீலங்காப் படையினருடனான மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**கப்டன் சாருணி**
மயில்வாகனம் மேகலட்சுமி
மட்டக்களப்பு

பளைப் பகுதியில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தின்போது 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர்

**வீரவேங்கை தவசாரங்கன் அல்லது அழகன்**
மயில்வாகனம் அரவிந்தன்
யாழ்ப்பாணம்

**மேஜர் தீசன் அல்லது ஓசையன்**
நாகராசா மதிதரன்
கிளிநொச்சி

**கப்டன் துளசிவேந்தன்**
நாராயணபிள்ளை சதானந்தசிவம்
யாழ்ப்பாணம்

30.08.2000 அன்று கனகம்புளியடிப்பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**வீரவேங்கை அன்பரசன்**
துரைசிங்கம் மோகனதாஸ்
பூநகரி, மன்னார்.

01.09.2000 அன்று தென்மராட்சி கனகம்புளியடிச்சந்திப் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின்போது போராளிகள் 5 பேர் வீரச்சாவடைந்தனர்.

**கப்டன் அருள்மோகன்**
மாரிமுத்து ஜேசுராஜா
கிளிநொச்சி

**வீரவேங்கை செழியமுதன்**
இராமநாதன் தினேஸ்
வவுனியா

**வீரவேங்கை தர்மினி**
தெய்வேந்திரம் தேவகி
மன்னார்

**வீரவேங்கை அனுசியா**
நாகராசா குமுதினி
யாழ்ப்பாணம்

**வீரவேங்கை விசுதினி**
கோபாலசுந்தரம் நந்தினி
மன்னார்

01.09.2000 அன்று தென்மராட்சி கச்சாய்ப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

**கப்டன் ஆனந்தரூபன்**
தியாகர் ஜெகன்
யாழ்ப்பாணம்

**2ஆம் லெப் துசிந்தா**
முத்துக்குமாரு வினோதினி
நெடுங்கேணி, வவுனியா

இதே தினம் தென்மராட்சி மட்டுவில் பகுதியில் ஏற்பட்ட மோதலின்போது எல்லைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

**சிறப்பு எல்லைப்படை வீரவேங்கை அப்பன்**
பரமசாமி இராஜேஸ்வரன்
கிளிநொச்சி

யாழ்குடாநாட்டில் ஐந்து முனைகளுக்கு ஊடாக முன்னேறிய சிறீலங்காப் படையினரை முறியடித்து விரட்டியடித்த தாக்குதலின்போது வீரச்சாவடைந்த 15 போராளிகளின் பெயர் விபரம்

**லெப்ரினன் கேணல் இரும்பொறை**
ஆசீர்வாதம் றமேஸ்
யாழ் மாவட்டம்

**கப்டன் தமிழ்க்காவலன்**
சீவரத்தினம் கனிஸ்ரஸ்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை அகன்புலி**
ஞானப்பிரகாசம் பிரதீபன்
திருமலை

**2ஆம் லெப் சர்மிளா அல்லது மணிமேகலை**
நல்லையா மேரிலுமினா
வவுனியா

**லெப் அமுதநகை**
யோகேஸ்வரன் சரணதேவி
யாழ் மாவட்டம்

**கப்டன் இசையவன்**
கந்தசாமி சிறீதரன்
மன்னார் மாவட்டம்

**வீரவேங்கை சசி அல்லது நவநீதா**
தியாகராஜா சகாயராணி
மன்னார் மாவட்டம்

**2ஆம் லெப் பூங்கிளி**
பொன்னுத்துரை சந்திரமதி
வவுனியா மாவட்டம்

**மேஜர் செந்தூரன்**
யோகராசா ராஜ்குமார்
ஆனையிறவு உப்பளம்,
கிளிநொச்சி மாவட்டம்

**2ஆம் லெப் அன்புமாறன்**
பொன்னுத்துரை உதயகுமார்
யாழ் மாவட்டம்

**கப்டன் சங்கர்**
புண்ணியன் சத்தியேஸ்வரன்
யாழ் மாவட்டம்

**கப்டன் குறிஞ்சி**
இராசதுரை கோடீஸ்வரி
யாழ் மாவட்டம்

**2ஆம் லெப் நிசாந்தி அல்லது நிசாந்தினி**
கணேசன் ஜெயந்தினி
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

**கப்டன் சோழன்**
லட்சுமணன் கெங்காதரன்
யாழ் மாவட்டம்

**சிறப்பு எல்லைப்படை வீரவேங்கை ஆனந்தன்**
தர்மலிங்கம் கிருஸ்ணானந்தன்
யாழ் மாவட்டம்




# என்னால் எதையுமே மறக்கமுடியவில்லை...!

**லண்டனில் இருந்து எமது வாசகி எழுதி அனுப்பியிருந்த அவரது துயர்தோய்ந்த கொடிய அனுபவங்கள் வாக்குமூலமாக...**

அது 1988ஆம் ஆண்டின் ஒரு நடுப்பகுதி! கொளுத்தியெறியும் வெய்யிலில் யாழ் மண், கருகிக்கொண்டு கிடந்தது!

வடமராட்சிப் பகுதியிலிருக்கும் சொந்த வீட்டை விட்டுவிட்டு, யாழ் நகருக்கு இடம் பெயர்ந்து வசதியாக இருக்கிறபோதும், ஊரும் வீடும் மனதிற்குள் வந்து வந்து எங்களை அலைக்கழித்துக் கொண்டேயிருக்கும்.

எனக்குத் திருமணப் பேச்சுக்கள் நடைபெறுவது ஒருபுறம், என் குட்டித்தங்கை குதியன் குத்திக்கொண்டு வேம்படிச் சிநேகிதிகளுடன் யாழ்நகர் முழுவதும் சைக்கிளில் ஊர்வலம் சென்று வருவது மறுபுறம்.

ஊரில்- அதாவது வடமராட்சிப் பகுதியில் ‘லிபறேசன் ஒப்பறேசன்’ என்ற சிங்கள இராணுவ நடவடிக்கை முற்றுப் பெற்று, அடுத்த அத்தியாயமான இந்திய இராணுவ அக்கிரமங்கள் நடந்தேறிக் கொண்டிருக்கிற காலம்.

ஊரில்- வீட்டில், தனியே இருக்கும் அப்பாச்சியும், அப்பப்போ அங்கே வந்து போகிற தம்பியும் அடிக்கடி எங்கள் நினைவிற்கு வருவார்கள்.

அன்று ஒரு சனிக்கிழமை. நானும் தங்கையும் யாழ்நகரிலிருந்து வடமராட்சியிலிருக்கும் எமது வீட்டை நோக்கிப் புறப்பட்டோம். ஒரு மணி நேர ‘பஸ்’ பயணம்... இப்போது இராணுவச் சோதனைகளால் இரண்டரை மணிநேரப் பயணமாய் இருக்கும்.

வல்லைவெளி தாண்டியபின், ‘பஸ்’ இற்குள் இருப்பவர்களை அவர்கள் சோதனை செய்யும்போதெல்லாம், ஒரு குறிப்பிட்ட நபரைத் தெரியுமா என்று கேட்டுக்கேட்டு வதைப்பார்கள்.

அந்த நபர் வேறுயாருமல்ல - என் அருமைத் தம்பியாக இருக்கும்! அன்பும் பாசமும் மானுட நேயமும் மிக்க என் தம்பியாக இருக்கும்! வீரமும் விடுதலை வேட்கையும் கொண்ட என் தம்பியாக இருக்கும்! தாய்மண்ணிற்காகத் தன்னை அர்ப்பணித்துவிட்ட என் தம்பியாக இருக்கும்!.

மனசிற்குள் அழுகை பொங்கும்! கண்கள் விழித்தபடி மிரண்டு கொண்டேயிருக்கும்!

எந்த நிமிடமும்.... நானும் என் தங்கையும் ‘பஸ்’ஸிலிருந்து இறக்கப்படலாம், இறக்கியபின் காரணமெதுவுமின்றிச் சுட்டுத்தள்ளப்படலாம், அல்லது சுக்குநூறாய் சிதைக்கப்படலாம் அதே பயம் விழிமுழுவதும் நிறைந்து, இதயம் அடித்துக் கொண்டே கிடக்கும்.

ஒரு பாவமும் செய்யாத நமக்கு, இந்தப்பயம் எதற்கு என்று மட்டும் யாரும் வினா எழுப்பிவிடாதீர்கள்! அதுதான் அப்போது அங்கு விதிக்கப்பட்டிருந்த விதி!

ஒரு தடவை வீட்டு மண்ணை மிதித்து, மரங்களுக்கு நீரூற்றி, அப்பாச்சியுடன் ஆசைதீரக் கதைத்து, தம்பியைத் தேடிக் கண்டுபிடித்து, உச்சிமுகர்ந்து, ஒருநேர உணவாவது உண்ண அழைத்து, ஒரு இரவு... ஒரேயொரு இரவு உறங்கி எழுந்து, மீண்டும் யாழ்ப்பாணம் போய் விடலாம், இதுதான் என் ஆசை!

ஆசையாசையாக ஊர் மண்ணை மிதித்தோம், மாலை நேரம்! இருள் சூழ ஆரம்பிக்கும் அடுக்கெடுப்பு வீடெல்லாம் சோபையிழந்து, வேலியும் தள்ளாடியபடி, மல்லிகைப் பந்தலோ விட்டுவிட்டுப் போன சோகத்தில் மனம்நொந்து வதங்கிப்போய்க் கிடந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்



## தமிழீழக் கடல்நீர்வள இரசாயனப் பொருள் உற்பத்தி

தமிழீழப் பிரதேசத்தின் கடனீரேரிகளில் உப்பை உற்பத்தி செய்வதற்கும், மற்றும் எரிசோடா (Caustic soda) குளோறின் (Chlorine) சோடியம் காபனேற், சுத்தப்படுத்தும் சோடா, ஐதரோகுளோரிக் அமிலம் (Hydro Chloric acid) பொட்டாசியம் குளோரைட் (Potassium Chloride) சோடாச்சாம்பல், கிப்சம், மக்னீசியா, புறோமின் (Bromine) போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பும் வசதியும் உண்டு. மேற்கூறப்பட்டவையாவும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, கல்லுண்டாய், செம்மணி, போன்ற இடங்களில் விளைவிக்கப்படும் உப்பை அடிப்படையாகக் கொண்டே பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் இலங்கைத்தீவு முழுவதற்கும் தேவையான இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இத்தொழிற்சாலையினால் பெருமளவிலான அந்நியச் செலாவணி சிறீலங்கா அரசிற்கு மீதப்படுத்தப்பட்டதோடு பல்வேறு கைத்தொழில்களுக்குத் தேவையான இரசாயன மூலப்பொருட்களை உற்பத்தி செய்து வழங்கக்கூடிய இயலளவு உடையதாகவுமிருந்தது. கடல்நீர்வளக் கனிமங்கள் குறைந்த செலவில் பெறக்கூடிய வாய்ப்பும் வசதியும் கடல்நீரேரிகள், களப்பு, குடா முதலிய கரையோர புவியியல் கூறுகள் நிறைந்த வடதமிழீழத்தில் நிறைந்து காணப்படுகின்றது. பரந்தன் இரசாயனத்தொழிற்சாலையில் இருந்து பெறப்பட்ட உற்பத்திகளில் முக்கியமானதொன்றாக விளங்கும் எரிசோடா சவர்க்கார உற்பத்திக்கும் புடவைக் கைத்தொழிலுக்கும் முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. இங்கு உற்பத்தி செய்யப்படும் எரிசோடாவில் சவர்க்கார உற்பத்திக்கு 63 வீதமும், புடவை உற்பத்திக்கு 12 வீதமும், ஏனைய தேவைகளுக்கு 25 வீதமும் கொள்வனவு செய்யப்பட்டது. சவர்க்கார உற்பத்திக்கு எரிசோடா பிரதான மூலப்பொருளாய் இருப்பதால் இலங்கைத்தீவின் ஒட்டுமொத்தச் சவர்க்கார உற்பத்தியாளர்கள் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையினையே நம்பியிருந்தனர்.

இத்தொழிற்சாலையானது 90 களின் ஆரம்பத்தில் சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுப் படைத்தளமாக மாற்றப்பட்டதன் பின்னர் பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்தே எரிசோடாவை இறக்குமதி செய்கின்றனர் சவர்க்கார உற்பத்தியாளர்கள். இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 1700 மெட்றிக்தொன் எரிசோடா உற்பத்தி செய்யப்பட்டது. இங்கு வருடம் ஒன்றிற்கு சராசரியாக 1000 மெற்றிக்தொன் குளோறின் உற்பத்தி செய்யப்பட்டது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட குளோறினில் 74 வீதம் கடதாசிக் கைத்தொழிலுக்காகவும், 21 வீதம் நீரைச்சுத்திகரிப்பதற்காகவும், 1. 8 வீதம் நெசவுத் தொழிலுக்கும், 0.9 வீதம் நீர் தாங்கி சுத்திகரிப்பிற்கும் பயன்படுத்தப்பட்டது. தமிழர் பிரதேசத்தில் அமைந்திருந்த மற்றொரு பாரிய கைத்தொழிற்சாலையான வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை மற்றும் எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலை என்பன பரந்தனில் உற்பத்தி செய்யப்பட்ட குளோறினிலேயே பெருமளவில் தங்கியிருந்தன. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையினால் ஆண்டொன்றிற்குச் சராசரியாக 500 மெட்றிக்தொன் மேசைஉப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. இது பிஸ்கற் உற்பத்திக்கும், குளிர்பான உற்பத்திக்கும், எண்ணெய் உற்பத்திக்கும், மார்ஜரீன் உற்பத்திக்கும் மற்றும் வீட்டுப்பாவனைக்கு எனவும் பாவிக்கப்பட்டது.

இங்கு வருடமொன்றிற்குச் சராசரியாக 900 மெட்றிக்தொன் ஐதரோகுளோறிக்கமிலம் உற்பத்தி செய்யப்பட்டது. இது இரும்பைச் சுத்திகரிப்பதற்கும், நாகம் பூசுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட சல்பூரிக்கமிலம் மேற்குறிக்கப்பட்ட தேவைக்குப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் இத்தொழிற்சாலையின் உற்பத்தியிலேயே ஏனைய நிறுவனங்கள் தங்கியிருந்தன. குறிப்பாக உருக்குக் கூட்டுத்தாபனம், யூனியன் கார்பைட், லிவர் பிரதேர்ஸ் போன்ற பெரிய நிறுவனங்கள் இத்தொழிற்சாலையையே நம்பியிருந்தன.

இவ்வாறு பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இலங்கைத்தீவில் நிலவிய பல்வேறு கைத்தொழில்களுக்கு அடிப்படை இரசாயனப்பொருட்களை வழங்கும் மூலப்பொருள் வழங்கும் மையமாக விளங்கியது. இன்று ஓயாத அலைகள்-03 இல் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் குறிஞ்சாத்தீவு மற்றும்ஆனையிறவு உப்பளங்களும் மீட்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக சிறீலங்காப் படையினரின் தங்ககங்களாக விளங்கிய இப்பகுதிகளை விட்டு சிங்களப்படைகளை வெளியேற்றிய வேளையில் இவற்றின் உட்கட்டமைப்புக்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டுவிட்டன. எனவே இன்று மீட்கப்பட்ட தொழிற்சாலையும் உப்பளங்களையும் புனரமைத்து மீள இயங்க வைப்பதன் மூலம் தமிழீழத்தின் பொருண்மிய உறுதிப்பாட்டைப் பேணலாம் அல்லவா. இன்றே சிந்திப்போம் செயற்படுவோம்.

### உங்கள் கவனத்திற்கு




அடக்குமுறை இராணுவங்களின் பிடியில் சிக்கி, எமது மக்கள் பட்ட கொடுமைகள், துன்பங்கள் எண்ணிலடங்காதவை. தசாப்தங்களாக எம் மக்கள் எத்தனை துன்பங்களை துயரங்களைச் சந்தித்துவிட்டனர். மனதுக்குள் புளுங்கிக் கொண்டிருக்கும் அந்தக் கொடிய அனுபவங்களை, நினைவுகளை கொட்டித்தீர்க்க இங்கே களமமைத்திருக்கின்றோம். இந்தப் பகுதியில், எமது மக்கள் தாம் பட்ட துயரங்களை துன்பங்களை கொட்டித் தீர்க்கலாம். இது கற்பனை கலந்த கதைக்களமாக நிட்சயமாக இருக்காது. உண்மையின் களம் இது. தமது அனுபவங்களை, அல்லது, தமக்கு முன்னால் நிகழ்ந்த தாம் அறிந்த கொடுமைகளை யாரும் எழுதியனுப்பலாம். யாவும் உண்மையாக இருத்தல் வேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். உங்கள் நாடுகளில், எமது கிளைகளுக்கூடாகவோ பிரதிநிதிகளுக்கூடாகவோ இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். உங்களுடன் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரியை முக்கியமாக குறிப்பிடவும். வெளியிடப்படும் வாக்குமூலம் பகுதியில் உண்மையான பெயர் விபரங்களை வெளியிடுவதை தவிர்ப்பதும் தவிர்க்காமல் விடுவதும் உங்களைப் பொறுத்தது.

நேரடியாக எமக்கு எழுதி அனுப்பவிரும்புவோர். KALATHIL C.C.T France. 341 rue des Pyrénées, 75020 Paris. FRANCE. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

---

செவ்வரத்தம் பூக்களெல்லாம் களைத்துச் சோர்ந்து, நிலம் நோக்கி முகம் சாய்த்து நின்றன.

பென்னம்பெரிய வீட்டில், ஒரு சின்ன மூலைக்குள், உடைக்கப்பட்ட மேசைக்கு அருகாக உட்கார்ந்தபடி அப்பாச்சி பத்திரிகை படித்துக்கொண்டிருந்தா.

எங்களைக் கண்டதும், நீண்ட நாட்களின் பின் முகம் மலர்வது போல, சிரித்தபடி எழுந்தா.

அப்புறம் என்ன? ஆயிரம் கதைகள் சொன்னா, ஒரு மாதகாலமாய் ஊருக்குள் நிகழ்ந்துவிட்ட சுகதுக்க சேதியெல்லாம் சொன்னா.

அதன்பின் தென்னம்பூக்கள் சிதறிக் கிடக்கும் ஆழக்கிணற்றில் அள்ளியள்ளிக் குளித்தேன். இனம் புரியாத சந்தோஷத்தில் பாட்டுப்பாடிக் களித்தேன்.

மறுநாள் காலை, என் தம்பி வரப் போகிறானென்ற களிப்பு! தங்கை அங்குமிங்குமாய் தாவிக்கொண்டு திரிந்தாள்.

அப்பாச்சி ஊறவைத்திருந்த உழுந்தை நான் கழுவி அரைத்தேன்.

இரவு நித்திரை வரவில்லை, மறுநாள் தம்பியைக்கண்டு. சுகம்கேட்கும் வரை அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடக் கூடாதென்ற பிரார்த்தனை ஒருபுறம்!

பொழுதும் விடிந்தது!

கோழிகூவும் ஓசையுடன் இணைந்தபடி துப்பாக்கி வேட்டொலிகள்!

நான் மனப்பதைப்போடு, தோசைக்கு சம்பல் அரைத்துக் கொண்டிருந்தேன், தம்பிக்கு... தோசையென்றால் ஆசை அல்லவா?

ஏகாந்தத்தில் மூழ்கியபடி, சம்பலை அரைத்துக்கொண்டே இருக்கிறேன், திடீரென வாகனச்சத்தங்கள்! வீடெல்லாம் கடலை நெய்யின் கமறல், வீட்டிற்குள் சீமென்ற் தரையில் 'பூட்ஸ்' ஒலிகள்! திடுக்குற்றுத் திரும்பினேன்! வீடு முழுவதும் பச்சைப் புழுக்களாய் இராணுவம்!

தோசைப் பானை 'டமார்' என்ற ஓசையுடன் எகிறி விழுந்தது! அம்மிக் குழவி உருண்டு சென்று தரையில் தொபீரென்று விழுந்தது! தரை உடைந்திருக்கலாம்! ம்... சிறிது உடைந்துதான் விட்டது!

எனது கூந்தலைப் பற்றியிழுத்த மிருகத்தின் கைகள் மிகவும் கரடுமுரடாக இருந்தது! எண்ணெய் வழியும் முகங்கள்! பெரிய பெரிய மீசைகளுடன் பற்களை நறும்பி நறும்பி உதடுகளை அசைக்கிறார்கள்! பாஷை எதுவும் புரியவில்லை! ஹிந்தியா? பஞ்சாப்பா? கூர்க்காவா? ஒன்றும் விளங்கவில்லை!

மலையென உயர்ந்து நின்ற அந்த மனிதமிருகம் என் இடையைச் சுற்றி இழுத்தது! இன்னொரு மிருகம், அசிங்கமாய் இளித்தபடி, என் தம்பியின் பெயரை மந்திரம் போல் உச்சரித்தபடி, உலகிலேயே மிக அசிங்கமான ஸ்பரிசம் எப்படியோ.... அப்படி என்னை ஸ்பரிசித்தது!

அப்பாச்சி..... கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் சிந்த, கைகூப்பியபடி நின்றா. அத்தனை இம்சையின் மத்தியிலும் என் கண்கள், அழகுமிக்க என் தங்கையைத் தேடின!

அவள் மல்லிகைப் பந்தலின் கீழ் மண்டியிட்டு, மன்றாடிக் கொண்டிருக்கிறாள். ஆறேழு மிருகங்கள் அவளைச் சுற்றியபடி! அவர்களின் நீண்ட கால்களிற்கிடையாக அவளது நீலநிறச் சட்டையின் ஓரங்கள் தெரிந்தன!

என்னை மீறிய திமிறலுடன் "அம்மா...." என்று நானலறிய ஓசை அந்த ஊர் முழுவதும் கேட்டதாம்! அப்படித்தான் சொன்னார்கள்.

யாரோ பெரியவன் வந்துவிட்டான்! அத்தனை பட்டாளத்தையும் மேய்ப்பவனாக இருக்கவேண்டும். அந்த அலறலின் வேகத்தில் அவசரமாய் வந்தான்.

எங்கள் கோலத்தைக் கண்டான், ஏதோ பாஷையில் ஏதோ பேசினான்.

எல்லோரும் அப்படியப்படியே அமைதியாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவன் என்னைப் பார்த்தான்! "உன் தம்பியை நாங்கள் ஒரு பிரதான நண்பனாக வரவேற்கிறோம். சகல மரியாதைகளும் வழங்குவோம். சரணடையச் சொல்லிவிடு, அதுவரையும் நீங்கள் ரெண்டு பேரும் இராணுவமுகாமில் வந்திருங்கள்" என்று ஆங்கிலத்தில் சத்தமாகக் கூறினான். அது ஒரு விஷக்கிருமியின் வேடிக்கையான நகைச்சுவைபோல இருந்தது!

நானும் தங்கையும் இராணுவ வாகனத்தில் ஏற்றப்பட்டோம்! உள்ளே இரத்தம் சிந்தியபடி எங்களூர் இளைஞர்கள்! எங்களைக் கண்டுகொண்ட அவர்களின் விழிகளிற்குள் வேதனைகலந்த திகைப்பு!

நாம் எதற்காக என்ன குற்றம் செய்ததற்காக, எந்தச் சட்டத்தின் கீழ் இராணுவ முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டோம் என்று இன்றுவரை எனக்கு காரணம் தெரியவில்லை!

அவ்வளவுதானா? பதில் இல்லாத கேள்விகள் அவை மட்டும்தானா? அதன் பின்னர் நடந்தவை எத்தனை? என்னால் எதையுமே மறக்கமுடியவில்லை.....!

- திருமதி. சந்திரா இரவீந்திரன்
இலண்டன்.

www.tamilarangam.net



# தென்தமிழீழத்தில் தொடரும் சிங்களப் பயங்கரவாதம்...
# உணவுக்கும் தடை! உழைக்கவும் தடை!

தென்தமிழீழ மக்கள் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள ஆட்சியாளர்களால் சொல்லொணாத் துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றனர். அண்மைக் காலங்களாக சிறீலங்காப் படைகளின் இனஅழிப்பு நோக்கிலான நடவடிக்கைகளால் அப்பாவித் தமிழர்கள் படும் அவலங்கள் அழிவுகள், இழப்புக்கள், வேதனைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகின்றன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் உக்கிரமடைந்து வருகின்ற நிலையில் அவற்றிற்கு முகங்கொடுக்கத் திராணியற்ற சிங்களப் படையினர் தமது ஆற்றாமையை, பழிவாங்கும் நடவடிக்கைகளாக அப்பாவித் தமிழ் மக்கள் மீது காட்டிவருகின்றனர். தென் தமிழீழத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலான மக்களின் அன்றாட ஜீவனோபாயத் தொழில்களாக மீன்பிடியும், விவசாயமும் விளங்குகின்றன. சிறீலங்கா அரசு தனது படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு கடுமையான பொருளாதாரத் தடையை விதித்துள்ளது. இது மாத்திரமின்றி எல்லையோரக்கிராமங்களில் உள்ள தமது வயல்களுக்குச் சென்று பயிர்ச்செய்கையில் ஈடுபடவும் தமிழ் மக்களுக்கு சிறீலங்கா அரசு தடைவிதித்துள்ளது. மட்டக்களப்பு வாவியில் பொதுமக்கள் மீன்பிடிக்கவும் தடைசெய்துள்ளன சிறீலங்கா அரசபடைகள். சிங்களப்படை அனுமதிக்கும் நேரத்தில் மீன்பிடிக்கச் செல்லும் பொதுமக்கள்கூட சிங்களப்படையால் சுட்டும், வெட்டியும் கொல்லப்படுகின்றனர். கைதுசெய்யப்பட்டு காணாமல் போகின்றனர்.

சிறீலங்கா அதிரடிப்படையின் அனுமதியுடன் சிறுபோகத்தின்போது நெல்பயிரிடப்பட்ட வயல்களில் இன்று அறுவடை செய்ய அனுமதி மறுத்துள்ளது சிங்களப் பாதுகாப்புத் தரப்பு. இது தொடர்பாக சந்திரிகா அம்மையாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டும் வழமைபோன்று எவ்வித பலனுமில்லை. கதிர் முற்றிய இவ்வயல்கள், தமிழர் நிலங்களில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்களவர்களால் அறுவடைசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டன. தமது நிலங்களில் நெற்றிவியர்வை சிந்தி உழுது விதைப்பது தமிழர்களாய் இருக்க, அதனை சிங்களப்படையின் பாதுகாப்புடன் அறுத்தெடுத்து அனுபவிப்பது சிங்களவர்களாகிப்போயுள்ள கொடுமைகளைப் பார்த்து வெதும்புவதைத் தவிர தமிழ் மக்களால் ஏதும் முடிவதாக இல்லை.



கடந்த ஆடிமாதத்தில் மாத்திரம் 6 விவசாயிகள் தமது வயலில் வேலை செய்து கொண்டிருந்த வேளையில் சிங்களப் படையால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் கிராமசேவகர் என்பது குறிப்பிடத்தக்கது. வாவிக்கரையில் நிறுத்தப்பட்டிருந்த ஏழை மீனவர்களின் வள்ளங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன சந்திரிகா படையால் நாசமாக்கப்பட்டுள்ளன.

ஜூலை 6ஆம் திகதி மட்டு அம்பாறை எல்லைக்கிராமமான சின்னவத்தையில் வைத்து அதிரடிப்படையால் கைதுசெய்யப்பட்ட 6 மீனவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் அறிய முடியாமலே உள்ளது. இவர்கள் C.S.U எனப்படும் நாசகாரத் தடுப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா அதிரடிப்படையால் இவர்களின் உறவினர்களுக்கு கூறப்பட்டுள்ளபோதும் இதுவரைக்கும் இவர்களை விடுதலை செய்வதற்கான எதுவித நடவடிக்கையும் சிங்களத் தரப்பால் மேற்கொள்ளப்படாததோடு, இம்மீனவர்கள் எங்குள்ளார்கள் என்பதும் உறவினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமேற்கு எல்லைப் பகுதியினுள் கடந்த ஆகஸ்ட் 10ஆம் திகதி ஊடுருவிய சிங்களப் படைகளால் மாணிக்ககண்டப் பகுதியில் வயற்காவலில் ஈடுபட்டிருந்த 17வயது தியாகராசா சின்னராஜா என்ற இளம்விவசாயி சுட்டுக்கொல்லப்பட்டார். அது மாத்திரமின்றி இவரோடு காவலுக்கு நின்ற 9 விவசாயிகளும் கடத்திச் செல்லப்பட்டனர். இவ் விவசாயிகளின் வயல்களும் சந்திரிகா படைகளால் நாசமாக்கப்பட்டன. இதனை மட்டக்களப்பு பொலன்நறுவை எல்லையிலுள்ள வெலிகந்த இராணுவ முகாமைச் சேர்ந்த படையினர் மேற்கொண்டதாகத் தெரியவந்துள்ளது.

இதேபோன்ற நடவடிக்கை ஆகஸ்ட் 16ஆம் திகதியும் அம்பாறை மாவட்டத்தின் திக்கோடை பிரதேசசபையைச் சேர்ந்த தம்மாங்கேணி கிராமத்திலும் இடம்பெற்றுள்ளது. கதிரவெளி பேருந்து தரிப்பிடத்தில் வைத்து இக்கிராமத்தைச் சேர்ந்த 8 தமிழ் விவசாயிகள் சிறீலங்கா விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர். இதுவரை அவர்கள் எங்குள்ளனர் என்பது அறியமுடியாதுள்ளதாக நிராதரவாக நிற்கும் இவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இவர்கள் செய்த ஒரே குற்றம் தமது வயல்களில் வேலை செய்தது மாத்திரமே.

ஆகஸ்ட் 20ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மதியம் வந்தாறுமூலையில் வைத்து 45 வயதான கந்தசாமி துரைராஜா என்ற விவசாயி சிறீலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தமது பயிற்சியின்போது தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டு, தவறுதலாக இவரைக் காயப்படுத்தி அவரது மரணத்திற்குக் காரணமாகியுள்ளதென, சிங்களப்படை சர்வ சாதாரணமாக அலட்சிய மனோபாவத்துடன் இதற்குக் காரணம் தெரிவித்துள்ளது. யானையை, மானைச் சுடுவதற்கு அனுமதிக்காத பௌத்த தம்மபதத்தைக் கடைப்பிடிக்கும் சிங்களத்தின் படைகளுக்கு தமிழ் ஏழை விவசாயிகளின் உயிர் கிள்ளுக்கீரை ஆகிவிட்டது போலும்.

தென்தமிழீழத்திற்குரிய வனப்பகுதிகளுக்கு விறகுசேகரிக்கச் சென்ற தமிழர்களும் சிங்களப் படையின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகும் கொடுமைகள் அடிக்கடி இடம்பெறுவது வழக்கமாகிப் போயுள்ளது. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பின் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க அனுமதிக்காது, எரிபொருள் தடையை அமுலாக்கியுள்ள அரசின் படைகளால் தமது அன்றாடத் தேவைக்கு விறகு சேகரிக்கும் உரிமை தமிழனுக்கு மறுக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 22ஆம் திகதி உழவு இயந்திரத்தில் மகாஓயா காட்டுப்பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்ற ஒன்பது பொதுமக்களை நோக்கி பதுங்கியிருந்த படையினர் சூட்டில் 5 பொதுமக்கள் ஒருவாறு தப்பி வீடு வந்து சேர்ந்தனர். ஆனால் மிகுதி நால்வரில் இருவர் சூட்டுக்காயங்களோடு சடலங்களாகப் பின்னர் உறவினர்களால் மீட்கப்பட்டுள்ளனர். மிகுதி இருவருக்கும் என்ன நடந்தது என்பது இதுவரை தெரியாதுள்ளது.

பல வழிகளிலும் தமிழர்களை வதைக்கும் சிறீலங்காப் படையின் சிப்பாய் ஒருவன் குடிவெறியில் சென்ற வேளையில் அவனது கைக்குண்டு வெடித்ததில் இரு இஸ்லாமியத் தமிழர்கள் பலியானதோடு 6பேர் காயமடைந்தனர்.

செப்டெம்பர் 4ஆம் திகதியும் வாழைச்சேனையில் வைத்து ஜோசப் ஜெயராமன் என்ற 19 வயது இளைஞர் அவரது வீட்டிற்கு அருகில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் ஊடகங்களில் வெளிவந்தவற்றில் சிலவே, சிறீலங்காப் படைகள் இவ்வகை நீசத்தனமான நடவடிக்கைகளின் மூலம் தமிழர்களைக் கொன்று, கடத்தி, கைதுசெய்து, சித்திரவதை செய்து அவர்களின் விடுதலை வேட்கையை ஒழித்துவிடலாம் எனச் சிங்களம் எண்ணுகின்றது போலும்.

"அப்பாவிப் பொதுமக்களை யுத்தகளத்தில் கேடயமாகப் பாவிப்பது மட்டுமல்ல நேரடியாகவும் மறைமுகமாகவும் அபிவிருத்திநிறுத்தம் உட்பட பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டிற்கு தூண்டும் சந்திரிகா அரசின் நரித்தனமான குள்ளத்தனமான சிந்தனை பகற்கனவாகவே முடியும்" என்கிறார், மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபலமான பத்திரிகையாளர் ஜி. நடேசன் அவர்கள்.

## "போய்வா சந்திரிகாவே" எழுதியதால் நாட்டை விட்டே விரட்டியடிப்பு!

கீர்த்தி கலாமேகம் என்ற சிறீலங்காப் பத்திரிகையாளர் இந்தியாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். இவர் எழுதிய 'புத்தகமான குட்டை சந்திரிகா' என்ற நூல் பிரசுரமானதும் இவரைப் பிடித்தது தொல்லை. போய் வா சந்திரிகா என்றெழுதிய இவர், தனது சொந்த நாட்டிற்கே, போய் வருகிறேன் என்று சொல்லிப் புறப்பட வைத்துள்ளது. ஆரம்பத்திலே கீர்த்தி கலாமேகம் லேக்கவுஸ் பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றினார். அத்துலத்முதலியின் கொலை சம்மந்தமாக எழுதியதால் அன்று வேலையை விட்டு நீக்கப்பட்டார். ஆனால் இது நடந்தது 90களின் நடுப்பகுதியில். அப்போது சந்திரிகா அம்மையார் வடமேல் மகாணசபை முதலமைச்சராக இருந்தார். கீர்த்தியின் வேலை பறிபோனது, அடிப்படை மனித உரிமை மீறலென, சட்டதரணிகள் சபையின் தலைவர் டி.டபிள்யு. அபயக்கோனுக்கு அப்பொழுது சந்திரிகா எழுதிய கடிதத்தில் கண்டனம் தெரிவித்திருந்தார். அத்துடன் நின்றுவிடாமல் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு நீதிமன்றில் தாக்கல் செய்யவும் அவருக்கு உதவினார்.

அந்தக் காலப்பகுதியிலேயே கீர்த்தியினால் 'பிரேமதாசாவும் டிங்கிரி பண்டாவும் சட்டத்தை எப்படிச் சிருஸ்டித்தார்கள்' எனும் தலைப்பிலான புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டு பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது. இது நடந்தது அனைத்தும் சந்திரிகா அம்மையார் ஆட்சிக் கட்டில் ஏறுவதற்கு முன்னர். அப்பொழுது கீர்த்தியை உச்சியில் வைத்துக் கொண்டாடினார் அவர்.

இப்பொழுது சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்து பெருந்தவறுகள் இழைத்த வேளையில் கீர்த்தி தமக்கே உரிய பத்திரிகா தர்மத்தின் அடிப்படையில் பயமின்றி போய்வா சந்திரிகா எனத் தலைப்பிட்டு இரண்டாவது புத்தகத்தை வெளியிட்டார். முதலாவது புத்தகத்தை வெளியிட்ட வேளையில் உச்சிமீது வைத்துப் போற்றியவர் தமது தவறுகளைச் சுட்டிக்காட்டி நூல் வெளியிடப்பட்டது கண்டு பதைபதைத்து கோபாவேசம் கொண்டார் சந்திரிகா.

சந்திரிகாவின் கைத்தடியும், பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கீர்த்திக்கு "உமக்கு நீதிமன்றில் அரசை தூசணை செய்ததாக வழக்குப் போடுவோம்" என்று வேறு பயமுறுத்தி கடிதம் அனுப்பினார். சந்திரிகா அம்மையாரின் வாடகைக் கொலையாளிகள் கீர்த்தியை பின்தொடரத் தொடங்கினர். கீர்த்திக்கு வேறு வழியே இல்லை. ஆரம்பத்தில் தனது வசிப்பிடத்தை விட்டு விடுதியில் தங்கியவர். பின்னர் சிங்கப்பூருக்குச் சென்று அங்கிருந்து இந்தியாவிற்கு வந்து அரசியல் தஞ்சம் கோரியுள்ளார்.

இப்பொழுது பாதுகாப்பாக இருப்பதாகக் கருதும் கீர்த்தி தமது நூலின் விற்பனையிலே தமது உயிர் வாழ்வு தங்கியிருப்பதாகக் கருதுகின்றார்.

ஏற்கனவே சண்டே லீடர் ஆசிரியர் அரசின் தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில், உண்மையை எழுதியமைக்காக இப்பொழுது சந்திரிகா அரசின் கொலைக்கரங்களின் தேடுதலுக்கு ஆட்பட்டுள்ள இரண்டாவது சிங்களப் பத்திரியாளரான கீர்த்தி, ஒருவாறு தப்பிப் பிழைத்து இந்தியாவில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அடிப்படை முரண்பாடு !

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது இனங்களுக்கிடையில் நல்லிணக்கம், ஒருமைப்பாடு ஐக்கியம் என்பனவற்றை உருவாக்குவதற்காக இருத்தல் வேண்டும். ஆகையினால் இதற்கானதொரு சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கென முன்வைக்கப்படும் அரசியற்தீர்வு யோசனைகள் உள்ளடக்கியவையாக இருத்தல் அவசியம். இது குறித்து எவரிடமும் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது. சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காகூட பொது இடங்களில் பேசுகையில் இதனையே தெரிவிக்கின்றார்.

ஆனால் சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினைக்குத் தீர்வென முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டமானது இதற்கு மாறானதொன்றாகவே உள்ளது. அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமையே இங்கு ஒருமைப்பாடு ஐக்கியம் என்பவை குறித்து கேள்விகள் எழுப்பக்கூடியது தான், ஆயினும் அரசியல் யாப்புத் திருத்தத்தில் இடம்பெறும் இடைக்கால நிர்வாக சபையின் சரத்துக்கள் இவைகளுக்கிடையில் முரண்பாடுகளைத் தீவிரமாக்குபவையாகவே உள்ளன.

இதில் முக்கியமானதாக இடைக்கால நிர்வாக சபையின் பிரதி முதலமைச்சர்களின் பதவிகள் உள்ளன. அதாவது வடக்கு-கிழக்கில் இரண்டாவது பெரும்பான்மைச் சமூகத்திற்கும், மூன்றாவது பெரும்பான்மைச் சமூகத்திற்கும் வழங்கப்படவுள்ள பிரதி முதலமைச்சர் பதவிகளும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இலாகாக்களும் இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டைப் பேண உதவப்போவதில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வெனில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளேயே ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும் எனச் சந்திரிகா குமாரதுங்க போன்றவர்கள் கூறிக்கொள்கின்றனர். சில வெளிநாட்டவரும் இது குறித்தே பேசுகின்றனர். ஆனால் சந்திரிகாவால் உருவாக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபைத்திட்டம் வடக்கு-கிழக்கில் இனங்களுக்கு இடையில் என்றும் பகை உணர்வையும் மோதல்களையும் தீவிரமாக்கும் வகையில் அமைந்துள்ளதை அவர்கள் உணர்ந்து கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

அதாவது இடைக்கால நிர்வாகசபையில் இனரீதியிலான பதவிஒதுக்கிடும், அதாவது பிரதி முதலமைச்சர்கள் இருவரும் எந்த எந்தச் சமூகத்தினராக இருத்தல் வேண்டும் என்பது அந்தந்தச் சமூகத்தினர் தனித்துவமான அரசியலைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திப்பது போன்றதொரு சூழ்நிலையை உருவாக்குவதாகவே இருக்கும். அதாவது பிராந்தியத்திலுள்ள மூன்று சமூகத்தினரும் அரசியல் ரீதியில் இணக்கப்பாட்டுடன் செய்யப்படுவதற்கு இது முட்டுக்கட்டைகளை உருவாக்குவதாக அமையும்.

இதைத்தவிர இருபிரதி முதலமைச்சர்களுக்கும் என்ன என்ன இலாகாக்கள் என ஒதுக்கப்பட்டிருப்பதானது இனங்களுக்கு இடையில் பதற்றத்தைத் தீவிரமாக்கும் வாய்ப்புக்களைக் கொண்டவையாகவும் அதேசமயம் இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பனவற்றை ஏற்படுத்துவதற்கு விரோதமானவையாகவும் அமைந்துவிடக்கூடியவையாகும்.

எடுத்துக்காட்டாக இரண்டாவது பிரதி முதலமைச்சர் சிங்கள சமூகத்தினருக்கானதாகும், இப் பிரதி முதல் அமைச்சரிடம், தொல்பொருள், நூதனசாலைகள், பௌத்த கலாச்சாரம், போக்குவரத்துப் பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி என்பன உள்ளடங்குகின்றன. இதில் இப் பிரதி முதலமைச்சருக்கான பொறுப்புக்கள் முதலமைச்சருக்கு உள்ளதைவிட அதிகமானதாக உள்ளது என்பது ஒருபுறம் இருக்க வழங்கப்பட்ட அமைச்சுக்கள் வடக்கு-கிழக்கில் எவை எவை பிரச்சினைக்குரியனவையாக உள்ளனவோ அவையாவும் சிங்களவருக்குரியதாகியுள்ளது.

அதாவது தமிழர் தாயகத்தில் பௌத்த சிங்களப் பேரினவாதம் எவற்றை நிலைநிறுத்த முற்படுகின்றதுவோ அவற்றிற்குரிய அனைத்து வளங்களும் சிங்களவரிடமே ஒப்படைப்பதற்கான ஏற்பாட்டை அரசியல் யாப்பின் மூலம் அரசாங்கம் ஏற்படுத்த விளைகின்றது. இதன் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் குடியேறியுள்ளோரின் இருப்பை உறுதி செய்வதோடு, தமிழரின் தேசியத்தை சிதைக்க முற்படுவதன் மூலம் தீராத பகையை வளர்த்துவிட அரசியல்யாப்பு வகைசெய்வதாகிறது.

இந்த ரீதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்புத் திருத்தம் என்பது இனப்பிரச்சினை தீர்விற்கு அடிப்படையாக இருக்க வேண்டிய ஐக்கியம், ஒருமைப்பாடு என்பனவற்றிற்கு நேர்மாறாகப் பிரிவினை, விரோதம் என்பனவற்றிற்கே வழிசமைப்பதாக உள்ளது. இதனால் இடைக்கால நிர்வாக சபை என்பது இனப்பிரச்சினைத் தீர்விற்கான ஒரு முன்னேற்பாடாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. மாறாக, இனங்களுக்கிடையில் மேலும் முரண்பாடுகளும், மோதல்களும் தீவிரமாகவே வழிவகுக்கும்.

**ஈழநாதம்**
ஆசிரியர் தலையங்கம் 13.08.2000

## வயம்பா ஒரு முன்னோட்டம்.




1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற வடமேல் மாகாணசபைத் தேர்தல், சிங்களத் தேர்தல் களத்தில் சற்று கூடுதல் போட்டிகள் நிலவிய தேர்தல். 1997ஆம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இருந்த போட்டியைவிட, அத்தேர்தலில் கடுமையான போட்டி நிலவியது. அடுத்து வர இருந்த ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு தயாராகும் சிங்களக்கட்சிகளின் மக்களின் நாடிபிடித்துப் பார்க்கின்ற தேர்தல் களமாக அது அமைந்திருந்ததால் வன்முறைக்குப் பஞ்சம் இல்லாமல் இருந்தது. மிக மோசமான தேர்தல் வன்முறைகள் மலிந்த களமாக அன்றைய வடமேல் மாகாண சபைத் தேர்தல் களம் அமைந்திருந்தது. அதனை வெளிப்படுத்தும் விதமாய், தமிழீழத்தில் இருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகையின் மாதமலரில், மேற்கண்ட கருத்துச் சித்திரம் வரையப்பட்டிருந்தது.

இருநூற்றி இருபத்தைந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக, ஐயாயிரத்தி நானூற்றி முப்பது வேட்பாளர்கள் கலந்து கொள்ளும் தற்போதைய பாராளுமன்றத் தேர்தலின்போது மோதல்கள் பலவகையிலும் இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தற்போதே தெரிய ஆரம்பித்திருக்கின்றன. இருபத்தொன்பது அரசியல் கட்சிகளும், தொன்னூற்றொன்பது சுயேட்சைக்குழுக்களும் மோதிக்கொள்ளும் இந்தத் தேர்தல் களம், அமைதியாக இருக்காது என்பது நிச்சயமானது. கடந்த மாதம் பதினெட்டாம் திகதி, பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய பாராளுமன்றத்திற்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது, நடைபெறப்போகின்ற தேர்தல் வன்முறையின் தீவிரத்தை எடைபோடப் போதுமானது. ■

# சிங்களத்துத் தேர்தல் களோபரங்கள்.

## சில சுவையான செய்திக் குறிப்புகள்.

### சகோதர மோதல்

வவுனியாவில் ஈ.பி.டி.பி வேட்பாளருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் வாள்வெட்டில் போய் முடிந்திருக்கின்றது. இச்சம்பவம் நடந்தது கடந்த ஆறாம் திகதி. வெட்டப்பட்டவர் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் விஜயதாச என்ற சிங்களவர். வாள்வீச்சு நடத்தியவர் ஈ.பி.டி.பி. வேட்பாளர் சுபசிங்க முதியான்சலாகே குமாரசிங்கா. அவரும் சிங்களவர். ●

### அம்மையாருடன் பெருமாள்.

வரதராஜப்பெருமாளை யாரும் மறந்திருக்க நியாயமில்லை. இந்திய இராணுவத்தின் உதவியினால், முன்னாள் வடக்கு கிழக்கு முதல்வர் என்ற பட்டத்தைப் பெற்றவர். தனது அஞ்ஞானவாசத்தை முடித்துக்கொண்டு கடந்த ஆண்டு முற்பகுதியில் கொழும்பு திரும்பிய அவர், தற்போது, சிங்களத்துத் தேர்தலில் குதித்துள்ளார். சந்திரிகாவின் அணியில் என்பதுதான் விசேடம். ●

### சரியானகூட்டு.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை, கொழும்பில் நடந்த மரியாதை அணிவகுப்பின்போபது, துப்பாக்கிப் பிடியால் தாக்கிய சிறீலங்காக் கடற்படையினன் விஜிதமுனி, பூமிபுத்திர என்றகட்சியை ஆரம்பித்து தேர்தல்களில் போட்டியிட்டு வருகின்றார். கடந்த சனாதிபதித் தேர்தலிலும் அவர் போட்டியிட்டிருக்கின்றார். தற்போதைய பாராளுமன்றத் தேர்தலிலும் அவரது கட்சி போட்டியிடுகின்றது. 1982ஆம் ஆண்டு, இத்தாலி பயணிகள் விமானத்தைக் கடத்தி பரபரப்பை ஏற்படுத்திய சேபால ஏக்கநாயக்காவும் விஜிதமுனியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றார். ●

### உள்வீட்டுச் சமாச்சாரம்.

சிறீலங்காவின் அமைச்சர் ஒருவர், அவரது கட்சி ஆதரவாளர்களாலேயே தாக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்கின்றது. உல்லாசப்பயணத்துறை அமைச்சர் சேமரசிங்கேவிற்கே தரும அடி வீழ்ந்திருக்கின்றது. தேர்தல் சுவரொட்டி தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தர்க்கமே, பின்னர் தாக்குதலாய் இறங்கியிருக்கிறது. அமைச்சர் காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த நாலாம் திகதி அநுராதபுரத்தில் சம்பவம் நடந்திருக்கின்றது. ●

### எலும்புத்துண்டும் ஈ.பி.ஆர்.எல்.எப். உம்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இரண்டு கூறுகளாகப் பிரிந்து, சிங்களத் தேர்தலில் போட்டியிடுகின்றது. ஒன்று சுரேஸ் அணி, மற்றையது பெருமாள் அணி. சந்திரிகாவைப், பெருமாள் கெட்டியாகப் பிடித்துவிட்டார் என்பதில் சுரேஸ் அணிக்கு பொறாமை. பெருமாள் கொள்கை இல்லாதவர் என்று திட்டித் தீர்க்கின்றார் சுரேஸ் பிரேமச்சந்திரன். சந்திரிகா வீசும் எலும்புத் துண்டுக்காக வரதர் தவம் கிடக்கின்றார் என்று, பத்திரிகையாளர் மத்தியில் வரதரைச் சாடியிருக்கிறார் ஈ.பி.ஆர்.எல்.எப். பைச் சேர்ந்த வில்சன் என்பவர். எதிரணியின் எலும்புத்துண்டு பற்றிய கருத்துக்கு வரதரிடம் இருந்து இன்னமும் பதிலில்லை. எலும்புத்துண்டு குறித்து, தமக்கிடையே என்ன தர்க்கம் என்ற பொறுப்புணர்வுடன் பொறுத்துக்கொண்டுள்ளார் போலும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆனையிறவே

## எதிர்காலம் எழுதப்போகும் பரணியொன்றுக்கு எழுதிவைத்துப்போகும் பாயிரம் இது

என்னழகுத் தாயவளின் "கழுத்தென்"றாகி
எழிலானாய்.
"உப்புமலை" முலையென்றாகக்
கண்களுக்கு விருந்தானாய்,
கண்டிவீதி "கருங்கூந்தல்" என விரிய அழகு
பூண்டாய்.
வன்னிக்கு "மணிக்கதவம்" நீயென் றாகி
வரவேற்றாய்.
காற்றுலவும் வெளியென் றாகிப்
பொன்னிலவு உலவுமிராப் போதிற் பார்த்த
புலவருக்கு "விருந்தாக"க் கிடந்தா யம்மா!

வீதியிரு மருங்கினிலும் நுரைப்பூ தள்ளி
விரிந்திருக்கும், வகிடெடுத்த சாலை தன்னில்
ஊதிவரும் காற்றெதிர்த்து ஊர்தி யோடும்.
உன்மடியில் ஊர்ந்துறெயில் வண்டி போகும்.
சோதியென அடிவானில் நிலவு பூக்கும்
சுகப்பொழுதில் ராக்குருவிப் பாடல் கேட்கும்.
பாதியிரா வேளையிலும் கன்றை யெண்ணிப்
பசுமாடு பால்சுரக்கும் என்தாய் மண்ணே....!

காலையிள வெய்யிலிலே உந்தன் மேனி
கசிந்துருகும்
இரவு மெயில்வண்டி போகும் வேளையிலே
குளிர்ந்துனது மேனி யாறும்.
விரிபரவைக் கடலினிலே குளித்து நாளும்
ஆளைமயக்கிடுமழகாய் எம்மை யெல்லாம்
அசைத்தானை யிறவேநீ அடிமை கொள்வாய்.
பாலை நிலா சொரியுமிரா வேளை வந்து
பார்ப்பவர்கள் உன்னழகிற் சொக்கிப் போவார்.

பூனைக்கண் ணோடொருவன்,
புகைக்கண் ணோடு பிறகொருவன்,
செங்கண்ணோடொருவ னென்று
ஆனையிற வேயுனையே பலபேர் தங்கள்
அதிகாரக் காலுழக்கி மிதித்தா ரம்மா!
வீணைக்கே நரம்புண்டு மாற்றார் காலில்
விழுந்தவர்க்கோ நரம்பில்லை தொழும்பென்றாகித்
தானைக்கும் வெடிக்கின்ற தடிக்கும் அஞ்சித்
தமிழரெலாம் பகைகாலிற் கிடந்தா ரம்மா.

என்னப்பன், அவனப்பன், அவனி னப்பன்
என்றிருந்த கொடியுறவு எல்லாம் வந்த
அந்நியரைத் தொழுதெழுதார், சொல்லும்
சொல்லை
அப்படியே ஏற்றிருந்தார், ஆனைக் கொம்பும்
பன்மணியும் நெல்மலையும் பாதம் வைத்தார்.
பணிந்தபடி ஏவலெனப் பலதும் செய்தார்.
உன்மடியில் கோட்டையென ஒன்றைக் கட்டி
ஒருவர்பின் னொருவரெனப் பலபே ராண்டார்.

உப்பளத்துக் காற்றுத்தா லாட்டத் தூங்கும்
உன்னுடலில் சிங்களத்துப் படைகளேறிச்
சப்பாத்துக் கால்களினால் மிதித்தார், எங்கள்
தாய்மடியில் தம்கொடியைப் பறக்கச் செய்தார்.

பக்கமுள ஊர்களையும் பறித்தே, தென்னை
பனைகளையும் முறித்தழித்து அரண்க ளிட்டார்.
திக்கிழந்த தமிழரெல்லாம் திசைக்கொன் றாகிச்
சிதைந்தழிந்தார் உன்னுறவையிழந்தே போனார்.

ஊரழித்தார், உறவழித்தார், உரிமை கொண்டே
உறங்கியநம் வாழ்வழித்தார், ஆழம் பாய்ந்த
வேரழித்தார், விடிகாலை கேட்கும் கோயில்
வேதவொலி வெண்சங்கு முழக்கம் தன்னைச்
சீரழித்தார் தெருவழியே போகும் போதில்
சிரம்தாழ்த்தி வரிசையிலே நிற்கச் செய்தார்
பேரழித்தே அகதியென ஊரூராகப்
போட்டலைத்தார், பொலிவிழந்து போனாய்
தாயே!

இருள்படர்ந்த வானத்தில் ஒளிகொண் டேறி
எம்தலைவன் எழுந்திட்டான், இனிமே லெங்கள்
விரல் மடிக்க முடியாது, வீசும் காற்றை
வீதியிலே நீமறிக்க முடியா தென்று
கருவிருந்த போதேதாய் வயிற்றி னுள்ளே
கைவீசிக் கொண்டமகன், புலிகள் சேனை
உருவாக்கித் தமிழீழம் காண்போ மென்று
உரைத்திட்ட போதேநீ மகிழ்ந்தா யம்மா!

பாய்கண்ட போதினிலே படுத்து,
சோற்றுப் பருக்கையெனில் அதையுண்டு
படுத்து,
மேடை வாய்கண்டு கைதட்டிப் படுத்து,
தேர்தல் வாக்கினிலே வருமென்று படுத்து,
வீட்டுச் சாய்மனையிற் படுத்திருந்த தமிழர்
தன்னை
சமராட வருகவெனத் தலைவன் கேட்டான்.
காயொதுங்கிக் கொண்டாலும் பூக்கள் தங்கள்
கைகொடுக்க விடுதலைப்போர் விளைந்ததம்மா!

எவனெங்கள் வீட்டுக்குப் போகும் பாதை
இடைமறித்தோன்?
எம்மூரில் வீசும் காற்றை
எவன் வந்து எரித்திட்டோன்?
என்றே கேட்டு எழுந்தார்கள் புலிவீரர்
தடுப்பான் யாரோ?
அவனின்று உயிர்கொண்டு போகானென்று
அலைஆனை யிறவின் மேல் எழுந்தாற்
போல....
சிவனன்று முப்புரத்தைச் சிதைத்தாற்போல.....
சினந்தெழுந்தே பாசறையிற் புகுந்தா ரம்மா!

காத்திருந்த நாளன்று விடிந்த தம்மா!
கண்திறந்த நாளன்று புலர்ந்த தம்மா!
கூத்தன்று முடிந்ததடா, கொடியோ ரேற்றிக்
கும்பிட்ட கொடியன்று கிழிந்த தம்மா!
வேர்த்திருந்த தாய்மண்ணின் மேனி யன்று
விளங்கியது, விழியிரண்டு சொரிய நின்று
போர்த்திறத்தாற் புலித்தலைவன் வெற்றி
கண்டு
புன்னகைத்தான் புவிமுகமே சிரித்த தம்மா!

கண்திறந்தாள் காலத்தாய், ஈழத்தாயோ
கையிரண்டும் கூப்பித்தன் வாழ்த்தைச்
சொன்னாள்.
வண்ணத்தாள் நீக்கித்தன் முகத்தைக் காட்டி
வானத்தாய் பூச்சொரிந்தாள், காற்றுத் தாயோ
பண்ணெடுத்து எம் தலைவன் தன்னைப் பாடிப்
பரிதவித்தாள், ஆனையிற வான தாயோ
மண்ணுறங்கும் தன்மடியில் உறங்குகின்ற
மாவீரர் தன்னையவள் வருடிக் கொண்டாள்.

மூன்றுநூற் றாண்டுகளின் பின்னர் வந்த
முழுவெற்றி
தமிழ்மறவர் பகைவர் குந்தும்
கூண்டெதையும் தீயிடுவார் என்றே வையம்
குறிப்பெழுதிக் கொண்ட வெற்றி
புலிகள் சேனை ஆண்டதமிழ் நிலம் யாவும்
ஆட்சி கொள்ள
அடிபணிந்து வருமெதிரிச் சேனை சாயும்
நீண்டநெடு நாளில்லை விரைவில் ஈழம்
நிமிருமென உலகறியச் சொன்ன வெற்றி!

உயிரள்ளிக் குடித்தவனோ வயிறு வெந்து
உருக்குலைந்து கிடக்கின்றான், கழுகின்கூடு
செயலற்றுக் கிடக்கிறது என்ற வாய்ச்சொல்
திசையெங்கும் பரவியதும் தமிழர் வெள்ளம்
துயரற்றுப் போனதெனத் துள்ளி னார்கள்.
சோகமினித் தொலைந்ததெனக் காற்றி லேறி
உயர்ந்தார்கள் முகிலிடையே பறந்தே போனார்.
ஊர் வீதி யாவினிலும் உலாப்போ னார்கள்.

வாயெடுத்துப் பாடியபூங் குயிலை, ஊரின்
வயல்வெளியை, ஒழுங்கையினை, வேலியோரம்
காய்சிலிர்த்த மாமரத்தை, அம்மன் கோவில்
கற்பூர வாசனையை மறந்தோமில்லை.
தாய்நிலத்தில் மீண்டும் போய் நிலவு நாளில்
தமிழோடு இசைபாடி வாழும் வாழ்வை,
பாய்விரித்துப் படுத்துறங்கும் இனிய வாழ்வை
படை நடத்தித் தந்தவனே! நெஞ்சில்
வாழ்வாய்.

புன்னகைத்தோம்! புதுவாழ்வு கையி லென்று
பூரித்தோம்! யார்க்குமினிப் பணியோ மென்று
விண்ணதிர நின்றுரைத்தோம் விடியு மெம்மண்
விரைவிலெனச் சூளுரைத்தோம், சென்று
பார்த்து
கண்சொரிய வாய்குழறக் களித்தோம், எங்கள்
கையழைந்த மண்ணிலொரு பிடிமண் அள்ளி
உன்னையினி ஒருநாளும் இழக்க மாட்டோம்
உயிருள்ள வரையினிலும் என்றோம், நின்றோம்.

**-புதுவை இரத்தினதுரை-**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | ITALY<br>TCC<br>Via Paolo Balsamo-1<br>90100 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft<br>Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |